இந்நூல் ஆர். 7542 - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கும் சுவடியையே பெயர்த்து எழுதப் பெற்றது ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7602

தேவி பாகவதம் - ஸ்கந்தம் 1
DĒVI BHĀGAVATAM - SKANTAM I

Paper : 20·7 × 16·5 cm. Pages 1—109

Lines 32 on a page. Tamil. Good. New. Extent 4000 granthas.

Purchased in 1961 - 62, from Sri T. R. Hariharasarma No. 6. Pillaiyar Koil Street, Triplicane, Madras.

This constitutes part-I of Devi Bhagavatam in 20 chapters in verses.

Author, Rama, Vaidyanatha sarma of Ahattiyan Palli (Tanjavur Dt.) belongs to the 20th century.

This has been rendered in accordance with the Sanskrit Devi Bahavatam.

Beginning

சிவமயம், தேவி துணை பதினெண்புராணத்திலொன்றாகிய தேவீ பாகவதம், முதல் ஸ்கந்தம். செய்யுள். ஆக்கியோன் கவிச்சக்ரவர்த்தி இராம வயித்திய நாத சர்மா அகத்தியான் பள்ளி முகாம் சிதம்பரம். கரதல அச்சுக்கூடம், A. U. S. 1936.

உ
சிவமயம்
தேவி துணை
(தேவி துதி)

உலகயன்மா லுருத்திரரெவ் வுமைபூசை
யாற்றொழிலை யுருற்று கின்றா
யலகில்யோகி களாலெந்த வாதிசத்தி
யுருத்தியான மாற்ற நிற்கு
மிலகெந்தப் பரையையாதி யெனருஷிக
ளியம்புகின்றா ரிசைகொ ளந்த
நலமிகுமா போகமோக்ஷ நல்குறுமம்
பிகைபாத நமஸ்க ரிப்போம்.

சிவமயம்
தேவி துணை
ஸதாசிவ குடும்பின்யை நம:
தேவீபாகவதம்
முதல் ஸ்கந்தம்
முதலத்தியாயம்

சவுனகர் வினா
(காப்பு)

மதிநதிசூ ழஞ்சடையான் மாதேவி
பாகவத மகிமை யாவு
நிதியுறுமா நிலமதனு ணிலையுறவெந்
நாளுஞ்சீர் நிகழ யாருந்
துதியுறவோர் புராணமதாய்ச் சொற்பொருணன்
றாயுறயாஞ் சொல்லி யேத்திக்
கதியுறநங் கணபதியின் கழலிணைச்செங்
கமலமலர் கருத்துட் கொள்வாம். க.

வேறு

உலகினை யாக்கல் காத்த லொழித்தன் முத்தொழில யன்மா
லிலகுருத் திரனுக் கீந்த தெப்பரை யெவைக்கு முன்னாக்
குலவியெஞ் சிவத்தி னீங்காக் கொள்கைய தேதச் சத்தி
யலகில்சீ ருரைக்க வன்னா ளடியிணை யகத்துள்
வைப்பாம். க.

நூல்

(வேறு)

தருவ ளங்க டரப்பெறு நைமிசத்
தொருவ ளம்பெற வுற்ற சவுனகர்
பெருவ ளங்கள் பிறங்கிடுஞ் சூதனி
னுருவ ளங்கண் டுகந்தெதி ரோதுவார் க.

சகுணை நிர்க் குணையா யெங்குந் தானனுக் கிரகஞ் செய்யப்
புகுமகா சக்தி யாரும் பூசித்து வணங்கத் தக்காண்
மிகுமித்தே விக்கு மேலாய் விளங்குவரொருவ ரில்லை
தகுமறை யறையு மீது சத்திய முணர்வீர் நன்றே

End

மாதவ வியாத னோடு மருவிடச் செய்தா ளந்தப்
போதவட் குடன்பட் டம்பா போய்த்தனக் கான மற்றோர்
தாதியை யனுப்ப வன்னா டவமுனி யிடத்தன் பாச்சேர்ந்
தேதமில் விதுரன் றன்னை யீன்றனள் புவிவி ளங்க

சத்திய வதியிவ் வாறு சந்திர குலவி ருத்தி
நத்திட வியாத னாலே நயனமி லான்முன் மூன்று
புத்திரர் தமையுண் டாக்கப் புரிந்ததைப் புரிந்தோ மென்று
பத்திமிக் குறவாழ் சூதன் பகர்ந்தனன் சவுன கர்க்கே

Colophon :

இருபதாம் அத்தியாயம் முற்றிற்று. ஆகச் செய்யுள் அ௨௯. முதல் ஸ்கந்தம் முற்றிற்று.

தாது ஹு
ஆடி மீ
௭௨

இங்ஙனம்
கவிச்சக்கர வர்த்தி
இராம. வயித்தியநாதசர்மா
முகாம்-சென்னை

(கு-பு)

இந்நூல் தேவிபாகவதம் முதல் ஸ்கந்தம் என்னும் பெயர்த்து. முற்றுப்பெற்றது. பதினெட்டுப் புராணங்களுள். மஹா புராணம், உபபுராணம் என்னுமிரண்டுமே, சிறந்தவையாகும். அவையே விஷ்ணுபாகவதம், தேவிபாகவதம் என்றும் பெயர் பெறும். அகுண மான சக்தி வாய்தவளாக தேவி கருதப்படுகிறாள். மற்றதேவதைகள் எல்லாம் அந்தந்த குணங்களையே உபாதியாகவுடையவர்கள் ஆவார்கள் அந்தந்த தேவதையை வருணிக்கும் புராணங்களை மறுத்து, குண விபாகங்களைச் செய்யாமல், பொதுவில் உலக மாதாவின் சிறப்புக் களைச் சொல்வதுதான் தேவிபாகவதம் என்பதாகும். அவள் உலகத்தைத் தோற்றுவிக்குமுன் பிரும்மா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மூவரையும் படைக்கிறாள். அவர்கள் மூலமாய், தோற்றத் தையும், அழிவையும் நடத்துகிறாள். பிறதேவதைகளும் தேவியின் கட்டளைக்குக் கீழ்ப்படிகின்றன. இந்நூல் தேவியின் தத்துவங் களையும் விளக்குகிறது. தேவி படைத்தற் காலத்தில் சரசுவதி யாகவும், காக்கும் காலத்தில் திருமகளாகவும், அழிக்கும் காலத்தில் துர்க்கையாகவும் இருக்கிறாள்.

இந்நூல் வடமொழியில் உள்ள தேவீ பாகவதத்தையொட்டித் தமிழில் எழுதப்பட்டுள்ளது. செய்யுட்கள் நல்ல நடையிலமைந் துள்ளன. இஃது பத்து ஸ்கந்தங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது முதல் ஸ்கந்தம் ஆகும். இதில் இருபது அத்தியாயங்கள் அடங்கி யுள்ளன. இவ்வரிய நூலினை இயற்றிய ஆசிரியர் தஞ்சை மாவட்டத்திலுள்ள அகத்தியான்பள்ளி என்னுமூரினைச் சேர்ந்த இராம. வயித்தியநாதசர்மா என்பவராவர். காலம் - தற்காலம். கவிச்சக்கரவர்த்தி என்னும் சிறப்புப் பட்டம் பெற்றவர். இவரது பிற நூல்கள் அகத்தீசர் கலம்பகம் முதலியன. காண்க.

R. No. 7603

தேவி பாகவதம் - இரண்டாம் ஸ்கந்தம்

DĒVI BHĀGAVATAM – IRAṆṬĀM SKANTAM

Paper: 21 × 14·5 cm. Pages 1-65

Lines 32 on a page. Tamil. Good. New. Extent 1250 granthas.

Purchased in 1961 - 62, *from* Sri. T. R. Harihara Sarma; 6, Pillaiyar Koil Street, Triplicane, Mardas.

Complete

This is part II of the previous work in 12 chapters.

Beginning

உ சிவமயம். தேவிதுணை. காமேஸ்வரம நப்ரி யாயை நம: தேவி பாகவதம்; இரண்டாம் ஸ்கந்தம். முதலத்தியாயம்.

மத்ஸ்ய கந்தி உத்பத்தி

காப்பு

பத்தி மிக்குப் பரவி வழுத்துவோர்க்
கெத்தி றத்தினு மெண்ணிட்ட காமியஞ்
சித்தி பெற்றுறச் செய்தரு ளும்பரா
சத்தி பாதந் தலைக்கணி யாக்குவாம்.

நூல்

சவுனக முனிவர் சூதன் றன்னடி பணிந்தெம்மைய
கவுரவர் குலவுற் பத்தி கழறிவந் தநிற்சந் தேகந்
தவுமன முடைய ராகத் தங்கின மாலவ் வைய
மவுனமு மகல நீயே மாற்றியிங் கருள வேண்டும். க

திருதராட் டிரன்முன் றோன்றித் திகழச்சத் தியவ திப்பேர்
தருமவ ளாணை யேற்றுத் தந்தனன் வியாதன் என்று
மருமைகொ ளவள்வி யாதற் கன்னையா மென்று மன்னாள்
குருகுலச் [சந்த]றுத்தான் கொண்டதோர் மனையா ளென்றும் உ

End

பிரமன்முன் றேவர் யாரும் பிரியமுற் றெம்மை பூசை
பரவுவ ரென்றான் மற்றோர் பரவுறா திருப்ப ரிப்பா
ரரசவத் தேவி யான்முன் னரிக்குப தேசம் பெற்ற
தரமிகு மிந்நூல் கேட்குந் தவனுல கடைவ ரின்பம். சச

என்றுரை தருவ தானீ யிப்பெரு நூலொன் றாலே
நன்றகச் சாந்தி கொள்வாய் நாடுமுன் பிதுர்க்கள் சொர்க்க
மொன்றுவ ரன்றி மற்றிவ் வுபாக்கியா னத்தைக் கேட்போர்
துன்றுவ தின்ப மென்று சொற்றனன் சூதன் மன்னோ. சரு

Colophon :

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று. ஆகச் செய்யுள் சஎச. இரண்டாம் ஸ்கந்தம் முற்றுப்பெற்றது.

ஆக ஸ்கந்தம் இரண்டுக்குச்
செய்யுள் கஉகரு
அத்தியாயம் கஉ
பவ ௵
மாசி ௴
குருநாள் 7-3-1935

இங்ஙனம்
கவிச்சக்கரவர்த்தி
இராம. வயித்தியநாதசர்மா
அகத்தியான் பள்ளி
முகாம்-சிதம்பரம்

(கு-பு)

இந்நூல் தேவிபாகவதம் இரண்டாம் ஸ்கந்தம் என்னும் பெயர்த்து. முற்றுப்பெற்றது. பன்னிரண்டு அத்தியாயங்கள் உள்ளன. இஃது முன்னூலின் தொடர்ச்சியேயாகும். குறிப்பு, ஆண்டு காண்க. ஆசிரியர் இராம வயித்தியநாதசர்மா. ஊர்-அகத்தியான் பள்ளி, தஞ்சை மாவட்டம்.

R. No. 7604

தேவி பாகவதம் - மூன்றாம் ஸ்கந்தம்
DĒVI BHĀGAVATAM MUNṚĀM SKANTAM

Paper : 21 × 14·5 cm. Pages 1—155

Lines 32 on a page. Tamil. Good. New. Extent 2850 granthas

Purchased in 1961 - 62, from Sri T. R. Hariharasarma, 6, Pillaiyar Koil Street, Triplicane, Madras.

Complete

This is part III of the work under R. 7603 in 30 chapters.

Beginning

உ

சிவமயம்

தேவி துணை

லப்த தியே நம:

தேவி பாகவதம் - மூன்றாம் ஸ்கந்தம்

முதல் அத்தியாயம்

ஜனமேஜய கிருத தேவி சொரூபாதி பிரமனை தேவி துதி

நம்பி நாளு நலம்பெற நாடுவோர்
தம்பி ழைக டமைப்பொறுத் தின்பமே
பம்பி டச்செய் பரம்பரை யாமுல
கம்பி கையீ ரடிகள் வழுத்துவாம் க

நூல்

சத்திமிகு சூதமுனி சவுனகர் முனஞ்சொற்
றருவனுயர் தவர்களே சனமேச யன்றான்
சித்திகொள் வியாதனிரு திருவடி வணங்கிச்
செய்வனுரை யையவுமை தேவியை விரும்பிப்
பத்தியுட னேபுகழ் படைத்தவொரு யாகம்
பண்ணுவை யெனப்பணி பணித்தனை யெனக்கப்
புத்திமக மேதது புகுந்தவழி யாதெப் புனிதமுள
தென்றுரை புகன்றருள்க நன்றே. க

மற்றுமித னோடுபிர மாண்ட வுற்பத்தி
வருவழியை யும்பிரமன் மாலுருத் திரர்சா
வுற்றவர்க ளாவாதி யாத்மிகமு னாந்துன்
புறுபவர்க ளாகாவ மாந்தத்து வத்திற்
குற்றவர்க ளல்லவா வோதுசுக துக்க முடையவர்க
ளல்லவா வுறுதுயிலை என்றும்
பெற்றவர்க ளல்லவா பேசுதா துக்கள்
பெறுமுட லுடன் குலவு பெற்றியர் களன்றோ

End

மற்றதன் பின்னி ராமன் மகிழுறத் தசமி யன்று
சொற்றரும் பிரயாணத்தை சூழவா னரச சைன் யங்க
ளுற்றிடக் கடற்கரைபோ யுயர்சேது பந்தனஞ் செய்
தெற்றியக் கரையுற் றங்க ளிராவணற் கொன்று
வாழ்ந்தான். 37

எவன்பரா சத்தியின்சீ ரியம்புமிக் கதையைக் கேட்பா
னவன்மல போகங் காண லாய்ப்பர பதத்தைக் கொள்வ
னிவண்பல நூலிருப்பி னிந்தநூற் குச்சமான
முவணிலை யெனவி யாத னுரைகொள் சூதன்
சொன்னானே. 38

Colophon :

முப்பதாம் அத்தியாயம் முற்றிற்று. ஆகச் செய்யுள் ......
தேவி பாகவதம் மூன்றாம் ஸ்கந்தம் முற்றிற்று.

இங்ஙனம்
கவிச்சக்கரவர்த்தி
இராம. வயித்தியநாத சர்மா
அகத்தியான் பள்ளி

பவ ௵
மார்கழி ௴
௨௩௨
8-1-1935

ஆக ஸ்கந்தம் 3-க்கு அத்தியாயம் 62, செய்யுள் 2362.

(கு-பு)

இந்நூல், தேவிபாகவதம் மூன்றாம் ஸ்கந்தம் என்னும் பெயர்த்து. முற்றுப்பெற்றது. முப்பது அத்தியாயங்கள் உள்ளன. இஃது முன்னூலின் தொடர்ச்சியேயாகும். அதன் குறிப்புங் காண்க. ஆசிரியர்-இராம. வயித்தியநாத சர்மா. ஊர்-அகத்தியான் பள்ளி.

R. No. 7605

தேவி பாகவதம் - நான்காம் ஸ்கந்தம்

DĒVI BHĀGAVATAM - NĀNGĀM SKANTAM

Paper : 23·8 x 13·5 cm. Pages 1-131

Lines 32 on a page. Tamil. Good. New. Extent 2750 granthas

Purchased in 1961 - 62, from Sri T. R. Hariharasarma, 6, Pillaiyar Koil Street, Triplicane, Madras.

Complete

This is part IV of the piece under R. 7603 in 25 chapters.

Beginning

உ

சிவமயம்

தேவி துணை

ஸ்ரீ திரிபுரசுந்தர்யை நம

தேவி பாகவதம் - நான்காம் ஸ்கந்தம்

முதல் அத்தியாயம்

ஜனமே ஜய கிருத ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாதி

காரணப்ரஸ்னை

காப்பு

பூவி டத்துப் பொருந்துயிர் கட்கெல்லா
மாவி யாகி யகிலத்தெ மக்கருட்
காவி யங்கணி காரணி யாரணி
தேவி பாதஞ் சிரத்தணி யாக்குவாம்

நூல்

பரசிவ சத்தி ரூபம் பகர்விசா ரத்திற் றேர்ச்சி
தரவருஞ் சூத யாங்கள் சாற்றிடச் சொன்ன வண்ணம்
வரலுறு மூன்றாம் ஸ்கந்தம் மகிமையைக் கிருபை கூர்ந்து
விரவுறு மெஞ்செ விக்கு விளங்கிட விரிவாய்ச் சொன்னாய்

மற்றதெவ் வாற தென்னின் மன்சன மேச யன்சீ
ருற்றதே வியின்சொ ரூப மோதிடக் கேட்ட தும்பார்
பெற்றபா கவதோத் பத்தி பின்றிரு மூர்த்தியும்தாம்
பற்றுடன் [தேவி]தன்னைப் பார்த்ததும் பகரம் மூவர்

End

மூர்த்திகண் மூன்றுஞ் சுத்தி மூன்றுமத் தேவி தன்னைச்
சீர்த்திபெற் றிடவே த்யானஞ் செய்பவ ராவார் மன்னும்
பார்த்திப வென்னைக் கேட்ட பரிசெதெ தவையா விற்கு
நேர்த்தியாய்ச் சொல்ல லுற்றே னீயறிந் திடுக நன்றே.

மறைதனக் கொப்பாய் பாப மறைவதாய் வியப்ப தேற
வறைவதா யநாதி யாக வாருமிப் புராணந் தன்னை
நிறைபுகழ் மேவக் கேட்டு நினைவுளர் பாப நீங்கக்
குறைவிலா தெம்மை லோகங் கொண்டுவாழ் வுறுவர்மன்னோ

Colophon :

இருபத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று. ஆகச் செய்யுள் . .

தேவி பாகவதம் நான்காம் ஸ்கந்தம் முற்றுப் பெற்றது.

ஆக ஸ்கந்தம் 4க்குச் செய்யுள் 3349. ஆக அத்தியாயம் 87.

யுவ ௵ இங்ஙனம்
தை மீ˝ கவிச்சக்கரவர்த்தி
இராம. வயித்தியநாத சர்மா
4-2-1936 அகத்தியான் பள்ளி
முகாம்-கல்கத்தா.

(கு-பு)

இந்நூல் தேவி பாகவதம் நான்காம் ஸ்கந்தம் என்னும் பெயர்த்து. முற்றுப்பெற்றது. இருபத்தைந்து அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. இது முன்னூலின் தொடர்ச்சியே ஆகும். அதன் குறிப்புங் காண்க. ஆசிரியர் இராம. வயித்திய நாதசர்மா என்பவராவர். காண்க.

R. No. 7606

தேவி பாகவதம் - ஆறாம் ஸ்கந்தம்

DĒVI BHĀGAVATAM ĀRAM SKANTAM

Paper; 20·5 × 13·5 cm. page : 1 - 156

Lines 32 on a page. Tamil. Good. New. Extent 2860 granthas.

Purchased in 1961 - 62, from Sri T. R. Hariharasarma, 6, Pillaiyar Koil Street, Triplicane, Madras.

Complete

This is part VI of the treatise under R. 7603 in 31 Chapters.

Beginning

உ
சிவமயம்
தேவி துணை
ஏகாந்த பூஜீ தாயை நம

தேவி பாகவதம் ஆறாம் ஸ்கந்தம். முதலத்தியாயம்
இந்திர கிருத்தரிசி பவ தோபாய சிந்தா கதனம்.

காப்பு

துட்டர் தம்மைத் தொலைத்துல குற்றுடுஞ்
சிட்டர் தம்மைச் சிறக்கப் புரந்திடற்
கிட்ட மாயுறு மெம்மையைப் போற்றிநங்
கட்டந் தீரக் களித்திடு வாமரோ

நூல்

வேறு

சகல சாத்திர மோர் ஞான சம்பன்ன னான சூத
பகவ நீ ஸ்கந்த மைந்தாற் பகாசிவ னரியின் பேத
மகிட னுற்பத்தி யன்னான்வரு விருந்தாந்த மிந்த்ரன்
றகவுறு மந்தரந் தைத்யர் தானவராற் காண்டோல்வி க

தேவ தானவர்க ளின்போர் தேவர்க டோல்வி தேவி
பூவருஞ் செயலத் தேவி புகழுமா யுதங்கள் காணன்
மாவருந் தேவி தூத வாதந்தாம் பரனின் றூது
மேவரு மவனோ டெம்மை விளங்க நின்றாற்றுவாதம்

End

இந்தவி ரகசியங்கா ணியல்கொள் பாகவதந் தன்னைச்
சந்த தந்தேவி யன்பன் சாந்தன் மாபக்தன் சிஷ்யன்
முந்திய மகனின் னோர்க்கே மொழிதர வேண்டு மல்லான்
மந்தன் சாதார ணங்கொண் மனிதர்க்குச் சொலற் காதே.

வேதத்துக் கொப்பா யுண்மை மேவிய தாய்க்க தைக்கு
ளோதச் சிரேட்ட மாக வுற்ற விந்நூலைப் பக்தி
மேதக்கப் படிப்போன் கேட்போன் மேதினி தனஞ்சீர் ஞானங்
கோதற்ற குணமிக் கேறக் கொண்டு வாழ்ந் திடுவ னன்றே

Colophon :

முப்பத்தோராம் அத்தியாயம் முற்றிற்று. ஆகச் செய்யுள் 1166. தேவி பாகவதம் ஆறாம் ஸ்கந்தம் முற்றுப் பெற்றது.

இப்படிக்கு
கவிச்சக்கரவர்த்தி
இராம. வயித்தியநாத சர்மா
அகத்தியான் பள்ளி
முகாம் சிதம்பரம்

வெகுதான்ய ஸூ
கார்த்திகை மீ
புதவாரம்
16-11-1938

அத்தியாயம் 1153
ஆக ஸ்ந்தம் ஆறுக்குச் செய்யுள் 5906
கர தல அச்சுக் கூடம் ,R. V. S.

(கு-பு)

இந்நூல் தேவி பாகவதம் ஆறாம் ஸ்கந்தம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இஃதும் முன்னூலின் தொடர்ச்சியே யாகும். குறிப்பு ஆண்டுக் காண்க. இதன் கண் முப்பத்தோரத்தியாயங்கள் அடங்கியுள்ளன. ஆசிரியர் இராம. வயித்திய நாத சர்மா. ஊர், அகத்தியான்பள்ளி, தஞ்சை மாவட்டம். தற்காலத்தைச் சேர்ந்தவர்.

R. No. 7607

தேவி பாகவதம் - ஏழாவது ஸ்கந்தம்
DĒVI BHAGAVATAM ĒZHAVADU SKANTAM

Paper : 20·3 × 13·6 cm. Pages 1-175

Lines 34 on a page. Tamil. Good. New. Extent 180C00 letters.

Purchased in 1961 - 62 from Sii. T. R. Hariharasarma 6, Pillaiyar Koil Street, Triplicane, Madras.

This is part VII of the treatise under R. 7603 in 40 Chapters

தொடக்கம்

உ
சிவமயம்
தேவி துணை
லஸத்தாடிம பாடலாயை நம
தேவிபாகவதம் - உத்தரபாகம்
ஏழாம் ஸ்கந்தம்
முதலாம் அத்தியாயம்
பிரஹமாத்யுத் பத்தி

காப்பு

நீளுந் தேவி நிமலை யுலகெலா
மாளு மெம்மை யமலை யி னோரிரு
தாளு மெஞ்சிரந் தாங்க விருந்திடி
னாளு கோளு நடத்துவ தென்னவோ க

முடிவு

மற்றிவ்வி ரகசி யத்தை மறவாமற் சிந்திப் பாய்நீ
யுற்றுரை யென்ற தெல்லா முரைத்தன னின்னுங் கேட்கப்
பெற்றுள தேத தைக்கேள் பிறங்கிட வென்றா னென்று
சொற்றனன் சவுன கர்க்குச் சூதமா முனிவன் மன்னோ. 32

நாற்பதாமத்தியாயம்
முற்றிற்று.

Colophon :

தேவி பாகவதம் ஏழாம் ஸ்கந்தம் முற்றுப் பெற்றது.

சுபம்

பிரமாதி
கார்த்திகை மாதம்
மங்கள வாரம்
12-12-1939

இங்ஙனம்
கவிச்சக்கரவர்த்தி
இராம. வயித்தியநாதசர்மா
அகத்தியான் பள்ளி

ஆகஸ்கந்தம் 7க்கு அத்தியாயம் 193 செய்யுள் 7205

(கு-பு)

இந்நூல் தேவி பாகவதம் ஏழாம் ஸ்கந்தம் என்னும் பெயர்த்து. முற்றுப்பெற்றது. நாற்பது அத்தியாயங்கள் உள்ளன. இது முன்னூலின் தொடர்ச்சியேயாகும். அதன் குறிப்புங் காண்க. ஆசிரியர். இராம. வயித்தியநாத சர்மா. ஊர், அகத்திடான் பள்ளி.

R. No. 7608

தேவி பாகவதம் - எட்டாம் ஸ்கந்தம்
DEVI BHAGAVATAM - ETTAM SKANTAM

Paper : 20·2 × 13·5 cm. Pages 1—60

Lines 33 on a page. Tamil. Good. New. Extent 60000 letters.

Purchased in 1961-62 from Sri. T. R. Hariharasarma 6, Pillaiyar Koil Street, Triplicane, Madras.

This is Part VIII of the piece under R. 7603 in 24 Chapters

தொடக்கம்

உ
சிவமயம்
தேவி துணை
ஹரிபரம் ஹேந்திர ஸேவிதாயை நம
தேவீ பாகவதம் - எட்டாம் ஸ்கந்தம்
முதல் அத்தியாயம்
மனவே தேவீ கிருதவரதானம்

காப்பு

கமரி யந்தரி யாளிவூர் திப்பரை
நமரி சோதரி நாரணி யோர்மனைக்
குமரி தேவி குமரனை யின்றரும்
சமரி பாதந் தலைக்கணி யாக்குவோம்.

முடிவு

இனிநாமஞ் சொன்னாலு மேர்பூஜா சொரூபத்தை
நனிகண்டா லும்பாரோர் நலமுறச் செய்தோர்முத்தி
தனியுலுச் செய் பிரகிருதி நருபஞ்ச கப்பூஜை
கனிவுறச் சொல் வேன்முனிவ காதாரக் கேளென்றனே.

(இருபத்து நான்காம் அத்தியாயம் முற்றிற்று)

Colophon

தேவீ பாகவதம் எட்டாம் ஸ்கந்தம் முற்றிற்று

பிரமாதி இங்ஙனம்
தை மாதம் கவிச்சக்கரவர்த்தி
சுந்து வளாகம் இராம. வைத்தியநாத சர்மா
அகத்தியன் பள்ளி

(கு-பு)

இந்நூல் தேவீ பாகவதம் எட்டாம் ஸ்கந்தம் என்னும் பெயர்த்து. முற்றுமுள்ளது. இருபத்தி நான்கு அத்தியாயங்கள் உள்ளன. இது முன்னூல் தொடர்ச்சியே ஆகும். அதன் குறிப்பும் காண்க. ஆசிரியர் இராம, வயித்திய நாத சர்மா என்பவர் ஆவார்.

R. No. 7609

தேவிபாகவதம் - ஒன்பதாம் ஸ்கந்தம்
DEVI BHAGAVATAM - ONPATAM SKANTAM

Paper: 20·2 × 13·5 cm. Pages 1-245

Lines 33 on a page. Tamil. Good. New. Extent 245000 letters.

Complete

Purchased in 1961-62 from Sri T.R. Harihara sarma 6, Pillaiyar Koil Street, Triplicane, Madras.

This is part IX of treatise under R 7603 in 50 Chapters.

தொடக்கம்

உ
சிவமயம்
தேவிதுணை
ஸர்வாங்க சுந்தர்யை நம
தேவிபாகவதம் - ஒன்பதாம் ஸ்கந்தம்
முதலத்தியாயம்
பஞ்சசக்தி வர்ணனம்

காப்பு

மும்மைத் தேவர்கண் முத்தொழிற் செய்திடச்
செம்மைத் தாயருட் செய்யும்ப ராசக்தி
யெம்மைக் காப்பா ளிணைமலர்ப் பாதங்க
டம்மைப் போற்றிச் சரண்புகு வாமரோ
நாடுவாம்நா டிப்ப ரீக்ஷை நலமுறச் செய்தா லங்கண்
விடுசுப மசுப மெந்த விதமவ்வா றேந டக்கம்
படுமிது நிச்ச யந்தா பகர்மத்ய மாக வந்தாற்
கெடுமது மத்ய மாவே துலங்கிடு மென்று னன்றே

ஐம்பதாமத்தியாயம்
முற்றிற்று

Colophon

தேவீபாகவதம் - ஒன்பதாம் ஸ்கந்தம் முற்றுப் பெற்றது.

விக்கிரதி
ஆடி மாதம்
சோம வாரம்
22-7-40

இங்ஙனம்
கவிச்சக்ரவர்த்தி
இராம. வயித்திய நாத சர்மா
அகத்தியன் பள்ளி
(முகாம்) திருச்சிராப்பள்ளி

(கு-பு)

இந்நூல் தேவீ பாகவதம் ஒன்பதாம் ஸ்கந்தம் என்னும் பெயர்த்து. முற்றுமுளது. ஐம்பது அத்தியாயங்கள் உள்ளன. இது முன்னூல் தொடர்ச்சி ஆகும், அதன் குறிப்பும் காண்க. ஆசிரியர் இராம. வயித்திய நாத சர்மா என்பவர் ஆவார்.

R. No. 7610

தேவிபாகவதம் - பத்தாம் ஸ்கந்தம்
DEVI BHAGAVATAM - PATHAM SKANTAM

Paper : 20·2 × 13·5 cm. Pages 1 – 148

Lines 33 on a page. Tamil. Good. Extent 140000 letters.

Complete

Purchased in 1961-62 from Sri. T. R. Hariharasarma 6, Pillaiyar Koil Street, Triplicane, Madras.

This is part X of the treatise under R. 7603 in 24 chapters.

தொடக்கம்

உ

சிவமயம்

தேவிதுணை

ஹரிகோபாருணாம் சுகாயை நம

தேவி பாகவதம் - பத்தாம் ஸ்கந்தம்

முதலாமத்தியாயம்

சுவாயம்புவின் விருத்தாந்தம்

காப்பு

கமலை யோர்மகி டாசுர மர்த்தனி
நிமலை சும்ப நிசும்ப நிமர்த்தனி
கமலை யாரணி காரணி நாரணி
விமலை பாதம் வியன்கிர மேத்துவாம்

End

எவன்கேட்கப் பெறுவ னன்னா னிகலோடு பரலோகத்திற்
நவசம்பத் தினையுக் கௌட்பந் தனையுமுற் றவனா
ரென்றேமற்

றிவணிது கூறுந் சொன்னே னிளசவிரு சாதசா ரத்தை
நவமிக வினி நீ கேட்டு நாடுவ ரென்னென் றாலும்

இருபத்து நான்காமத்தியாயம் முற்றிற்று

பதினொன்றாம் ஸ்கந்தம் முற்றிற்று

விஷு
ஐப்பசி மாதம்
23-10-41

இங்ஙனம்
கவிச்சக்கரவர்த்தி
இராம. வயித்தநாத சர்மா
அகத்தியான்பள்ளி
முகாம் - சிதம்பரம்

(கு-பு)

இந்நூலில் தேவி பாகவதம் பத்து மற்றும் பதினொன்றாம் ஸ்கந்தங்கள் உள்ளன. முற்றுமுளது. இது முன்னூல் தொடர்ச்சியாகும். ஆசிரியர் வயித்தியநாத சர்மா ஆவார்.

R. No. 7611

அகத்தீசர் கலம்பகம்

AKATTĪSAR KALAMBAKAM

Paper: 20·8 × 14·2 cm. Pages 1-30

Lines 24 on a page. Tamil. Fair. Old. Extent 450 granthas.

Purchased in 1961 - 62, from Thiru. T. R. Hariharasarma, 6, Pillaiyar Koil Street, Triplicane, Madras.

Complete

A prabandham on Siva in the shrine Ahattiyan Palli (Tanjore Dt.) by Rama. Vaidyanatha Sarma of Ahattiyan Palli.

Beginning

உ
சிவமயம்
தேவி துணை
(இஃது)
அகத்தீசர் கலம்பகம்
(காப்பு)
வெண்பா

சிக்கலம்பு தேவன் றிருவகத்தி யான்பள்ளிப்
பக்கலம்பு பூண்ட பரன்பாற்செ - யிக்கலம்ப்
கப்பாமா லைக்கிதழிக் கண்ணடிகாண் கைப்போத
கப்பாதப் பூவேநற் காப்பு

(நூல்)
மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா
எட்டடித் தரவுகள்

சீர்பூத்த திருமகடன் றிருக்கொழுநன் றிருமாலு
நீர்பூத்த நாமகட னாயகனா நான்முகனு,
முறையர்க முகவாசன் முன்னின்று முழுதேவற்
குறையாவுங் கெர்டுசிரசிற் கொண்டாடிக் கொண்டுசெய

வரியதொரு வம்மையுமோ ரத்தமதி லந்தமதாக்
கரியவுடற் காணவெகு களிப்போடு கவின்செய்யச்
சேயிருவர் செஞ்சுடர்போற் சென்றிருநற் றிசையிலங்க
மாயிருசீர் மாகயிலை மலையதனில் வாழ்கின்றோய்

பண்ணவர்கள் பாடிடவும் பலநாவு படைத்திலமென்
றெண்ணரிய வெழிற்சோணாட் டேர்நகரு ளேதங்கு
மம்புவியி னாடையதா மர்ழ்கடலி னருகேசூழ்
வம்புமறை வனத்துறையு மண்வாளர் மாகோயிற்

End

னுலகமோ ரேழும் பலமுறை பயந்து
மிளமுலை முதிரா விறைவியில் வைகு
மரமுத றடிந்த காமரு குழவியின
மழலைத் தீஞ்சொலின மகிழ்திடுஞ் செவியினை

செஞ்செவி கைப்பயான றெரித்தபுன மொழிக்கு
மளித்தே யருள்கூர்ந் தாண்டுகொண் டானனல்
தேனெனப் பாலெனத் தித்திக் குந்தமிழ்
மாண்புயர் கவிகள் வழுத்துநற் பாவலீர்

செந்நெறி யடையுஞ் சிந்தைமேற் கொண்டு
பாத்தொடுத் தாளும் பரமனை
நாத்தழும் புறநீ ரேத்துமின் சீரே.

(கு-பு)

இந்நூல், அகத்தீசர் கலம்பகம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அகத்தியான் பள்ளி என்னும் தலத்தில் கோயில் கொண்டெழுந் தருளியுள்ள சிவ பெருமானைப் பற்றிப் போற்றிப் புகழ்ந்து பாடப்பட்டதே இஃதாகும். ஈசன் பெயர் அகத்தீசர் என்பதாகும். கலம்பகம் 'என்னும் பிரபந்த முறையில் இயற்றப் பெற்றது. ஆசிரியர் இராம. வயித்தியநாதசர்மா என்பராவார்.

ஊர் : அகத்தியான் பள்ளி

R. No. 7612

சன்னதிப் பழக்கம் அல்லது மனித வாழ்க்கையைப் புனிதமாக்கவல்ல மிகச்சிறந்த வழி

SANNIDIPPAḶAKKAM OR MANITAVĀḶKKAIYAIP PUNITAMĀKKAVALLA MIKAC CIṚANTA VAḶI

Paper : 34.7 × 21.5 c.m. Pages : 1 – 71

Lines 35 - 37 on a page, Tamil, Fair, Old Extent 1,400 granthas.

Presented in 1961 - 62, by Thiru S. R. Venkataraman, Servants of India Society, 8, West Cott Road, Madras - 14.

Complete

Full of Brother Lawrence's (? – 1691) dialogues, hints and letters on Church habits and Christian philosophies

This is a Tamil translation from English book C. R. Anantha Narayana Sarma

Beginning

முகவுரை

லோரேயின் (Lorraine) நகரத்திலிருந்த நிக்கோலாஸ் ஹெர்மன் (Nicholas Herman) என்பவர் ஓர் எளிய குடும்பத்திற் பிறந்தவர். அதிகமாகக் கல்வி பயிலாதவர். குற்றேவலும் போர்ச் சேவகமும் செய்து பின்னர் பாரிஸ் (Paris) நகரத்திலுள்ள கார்மிலைட் என்னும் வெருங்கால் குருமாரின் (Barefooted Carmelites) லௌகீக அங்கத்தினர் ஒருவராக கி. பி. 1666-ல் ஏற்றுக் கொள்ளப்பட்டவர். அங்கு அவர் அந்த மடத்துச் சமையலறையில் பணிவிடைகள் செய்து வந்தார். அது முதல் அவருக்கு லாரென்ஸ் ஸகோதரர் என்று பெயர் வழங்கி வந்தது. இங்குத் தொகுக்கப்பட்டிருக்கும் சம்பாஷணைகளிலும், கடிதங்களிலும் காணுகிற பிரகாரம் அவர் ஒரு சிறந்த மெய்யன்பு பூண்ட அடியாராய் ஒழுகி வந்து தமது முதிர்ந்த எண்பதாம் வயதில் 1691 - ம் வருஷம் பெப்ருவரி மாதத்தில் இறைவனடி சேர்ந்தார்.

End

...............தமது கருமங்கள் ஒவ்வொன்றையும், அவர் அதனதன் காலத்திலும், சிறிதும் தடுமாறாது ஒரே ரீதியான மனவுறுதியுடனும் தளராத ஊக்கத்துடனும் செய்து வந்தார்.

எனக்கு உழைக்குங்காலம் வேறு உபாஸனா காலம் வேறு என்பது கிடையாது. பகவத் ஸந்நிதியில் மஹா ஆசீர்வாதம் பெறுகையில் எவ்வாறு முழந்தாளிட்டுக் கொண்டு, அமைதியாயிருப்பேனோ அவ்வாறே மடப்பள்ளியில் பல ஜனங்கள் ஏககாலத்தில் வந்து சத்த மிட்டுக் கூவி வெவ்வேறு பண்டங்கள் வேண்டுமென்று கேட்கையிலும் நான் கடவுளையே முழு மனதுடன் அமைதியாய்த் தியானிப்பவனாக விருப்பேன் என்றார்.

Colophon :

இறைவனே இணையற்ற துணை லாரென்ஸ் ஸகோதரர் போதித்த ஸந்நிதிப் பழக்கம் முற்றிற்று.

(கு-பு)

இந்நூல் சன்னிதிப் பழக்கம் அல்லது மனித வாழ்க்கையைப் புனிதமாக்கவல்ல மிகச் சிறந்த வழி என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. பக்தி, ஞான மார்க்கங்களை உணர்த்துவது. இஃது கிறிஸ்துவ முனிவர்களில் ஒருவரான லாரென்ஸ் ஸகோதரர் (Brother Lawrence) என்பவரது சம்பாஷணைக் குறிப்புக்களும் கடிதங்களும் அடங்கியது. இவ்வரிய நூலினை ஆங்கிலப் பதிப்பிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தவர் திரு. சி. இரா. அனந்த நாராயணய்யர் என்பவர் ஆவார். மிகவும் சிறந்த நூல். காண்க.

R. No. 7613

தொல்காப்பியம் - பொருளதிகாரம் - உதாரணச் செய்யுளகராதி

TOLKĀPPIYAM - PORUḶATIKĀRAM UTĀRAṆACCEYYUḶAKARĀTI

Paper : 34·4 × 21·8 cm. Pages 1 — 175

Lines 26 on a page. Tamil. Good. New. Extent 2660 granthas

Complete

Restored in 1961-62, from a manuscript described under R. No. 5744.

(கு-பு)

இந்நூல் ஆர். 5744 - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருப் பதையே படி எடுக்கப் பெற்றது ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7614

அநுபவ வைத்தியம்
ANUBHAVA VAITTIYAM

Paper : 34·4 × 21·8 cm. Pages 1—150

Lines 26 on a page. Tamil. Good. New. Extent 2250 granthas .

Complete

Restored in 1961-62, from a manuscript described under R. No. 2548

(கு-பு)

இந்நூல் ஆர். 2548 - ஆம் எண்ணில் விளக்கப்பட்டிருப்பதையே படி எடுக்கப் பெற்றது ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7615

துவாதச பாவ பலன்
DUVĀTASA PĀVA PALAN

Paper : 34·4 × 21·8 cm. Pages : 1—63

Lines 26 on a page. Tamil Good. New. Extent 900 granthas.

Complete

Restored in 1961-62, from a manuscript described under R. No. 7534.

இந்நூல் ஆர். 7534 - ஆம் எண்ணில் விளக்கப்பட்டிருப்பதையே படி எடுக்கப் பெற்றது ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7616

மகாவிந்த அம்மானை பாகம்-1, பகுதிகள்-1&2
MAHĀVINDA AMMĀNAI Part-I, Divisions-I&II

Paper ; 34·2 × 21·7 c.m. Pages : 1 530; 531-990

Lines 26 on a page. Tamil. Good. New. Extent 15000 granthas. Complete

Restored in 1961-62, from a manuscript described under R. No. 7354

(கு-பு)

இந்நூல் ஆர். 7354 - ஆம் எண்ணில் விளக்கப்பட்டிருப்பதையே படி எடுக்கப் பெற்றதாகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7617

ஹோரா சாஸ்திரம்
HŌRĀ SĀSTIRAM

Paper ; 34·2 × 21·8 c.m. Pages : 1—118

Lines 26 on a page. Tamil. Good. New. Extent 1750 granthas. Complete

Restored in 1961 - 62, from a manuscript described under R. No. 438

(கு-பு)

இந்நூல் ஆர். 438-ஆம் எண்ணில் விளக்கப்பட்டிருப்பதையே படி எடுக்கப் பெற்றதாகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7618

கிறித்தவர் வேதப் புத்தகம்
KIRITTAVAR VĒTAPPUTTAKAM

Paper ; 34·2 × 21·7 c.m. Pages : 1—521

Lines 26 on a page Tamil. Good. New. Extent 7800 granthas

Complete

Restored in 1961 - 62, *from a manuscript* described under D. No. 2051

(கு-பு)

இந்நூல் டி. 2051-ஆம் எண்ணில் விளக்கப்பட்டிருப்பதையே படி எடுக்கப் பெற்றது ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7619

மகாவிந்த அம்மானை பாகம்-2, பகுதிகள் 1&2
MAHĀVINDA AMMĀNAI Part-II, Divisions I&II

Paper ; 34·2 × 21·7 c.m. Pages : *991—1666; 1667-2067*

Lines 26 on a page; Tamil. Good. New Extent 24,000 granthas

Complete

Restored in 1961-62, from a manuscript described under R. No. 7355

(கு-பு)

இந்நூல் ஆர். 7355 ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருப்பதையே படி எடுக்கப் பெற்றதாகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7620

இராம வாசகம்

IRĀMA VĀCAKAM

Paper ; 34·2 × 21 c. m. Pages : 1 - 761

Lines 26 on a page, Tamil. Good. New. Extent 11,400 granthas.

Complete

Restored in 1961-62, from a manuscript described under R. No. 7356.

(கு-பு)

இந்நூல் ஆர். 7356 - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கும் பிரதியையே பெயர்த்து எழுதப் பெற்றது ஆகும். அதன் குறிப்புக் காண்க.

R. Nos. 7621-7623 (One Codex)

Palm leaf 38·5×3·5 cm. Foll 1—197

Lines 10-11 on a page. Tamil. Injured. Old. Extent 6,800 granthas.

Presented in 1961 - 62, by Thiru. L. A. Vaiddiyanathan. 13, East Madavala Street, Lalgudi, Trichy District.

R. No. 7 621

அகத்தியர் பரிபூரண காவியம் - ஆயிரத் திருநூறு

AKATTIYAR PARIPURANA KĀVIYAM - 1200

Foll : 1—147 Extent 5000 granthas

Complete

Same work as that described under R. No. 5825.

(கு-பு)

இந்நூல் ஆர். 5825 - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கும் சுவடியே ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7622

போக நாயனார் - எழுநூற்றறுபத்திரண்டு
BHOGANĀYANAR - 762

Foll : 148-183 Extent 1300 granthas.

Begins on fol. 148(a) of the manuscript described under R. No. 621

Complete

Same work as that described under R. No. 278.

(கு-பு)
இந்நூல் ஆர். 278 - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கும் சுவடியே ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7623

போக நாயனார் - இரண்டாம் காண்டம்
BŌGANĀYANAR - IRAṆṬĀM KĀṆḌAM

Foll : 184—197 Extent 500 granthas

Begins on fol 184(a) of the manuscript described under R. No. 7621.

Incomplete

This is the second of the seven cantos by Bhogar. This, in 125 verses, deals with medicines and medical treatments.

Beginning

போகநாயனார் ஏழுகாண்டத்தில் ரெண்டாங் காண்டம்

இரண்டான ஆயிரத்தை விரித்துச் சொல்ல
ஈசுவரனின் றெடுத்தகரி முகன்காப் பாகும்

திரண்டான சிவனுடைய பதத்தைப் போற்றி
திரிபுரசுந் தரிபாதஞ் சிரசில் வைத்து
கரண்டான காலாங்கி அய்யர்பதம் போற்றி
கடாட்சித்த மூலகுரு பாதம் போற்றி
பரண்டான பதஞ்சலியார் தட்சிணா மூர்த்தி
பாதமெந்தன் சிரசில் வைத்துப் பாடுறேனே

பாடுறேன் ரிஷி சித்தர் பாதம் போற்றி
பயிற்றிவித்த அகத்தியர் தம் பாதம் போற்றி
வாடுறேன் வாணியுடைப் பாதம் போற்றி
மகத்தான கோரக்க ரிஷிபாதம் போற்றி
தேடுறேன் புசண்டர்பதஞ் சிரசில் வைத்து
சிவகாமி தாய்சொன்ன சொல்லைக் கேட்டு
போடுறேன் பிற்காண்டம் ஆயி ரத்தில்
புகட்டினேன் வாதமென்ற அங்கந் தானே

End

தானென்ற ஆணவத்தை அறுத்துத் தள்ளு
சண்டாள கோபத்தை வாளால் வீசு
ஊனென்ற ருசிதன்னை ஒழித்துப் போடு
ஊறாதே சய்யோகம் தன்னை நீக்கு
கானென்ற ஊரென்றேன் மனஞ்செவ் வானால்
கற்பங்கள் தின்றுஜட கசட்டை நீக்கு
வேனென்ற ஜடமெடுத்தால் விழலா காமல்
மெய்ஞ்ஞான விரிவதனை விளக்கஞ் செய்யே

செய்திட்டு மறதியா யிருந்தா யானால்
தேவி யைத்தான் சிந்தித்துக் கேட்டுக் கொள்ளு
வைதிட்டு ஆத்தாளை வாதங் கேளு
மாதாதான் மக்கள்மேல் மகிழ்ச்சி யாகி

எய்திட்டுப் பானத்தால் எல்லாம் சொல்வாள்
ஏழைபங்கில் குடியிருந்து இரட்சிக் குந்தாய்
உய்திட்டுப் போகாமல் கற்ப முன்னு
உத்தமித்தாய் விளக்கொளியின் உறுதி கேளே

(கு-பு)

இந்நூல் போக நாயனார் - இரண்டாம் காண்டம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெறவில்லை. வைத்தியம் சம்பந்தமானது. மொத்தம் நூற்றிருபத்தைந்து செய்யுட்களுள்ளன. ஏடுகள் நன்றாக வுள்ளன. காண்க.

R. No. 7624

அகத்தியர் சௌமிய சாகரம் - ஆயிரத்திருநூறு
AKATTIYAR SAUMIYA SAKARAM - 1200

Palm leaf ; 35·8 × 3·2 cm. Foll : 1—184

Lines 9 on a page. Tamil. Injured. Old. Extent 6000 granthas.

Presented in 1961 - 62, by Thiru. L. A. Vaiddiyanathan, 13, East Madavala Street, Lalgudi, Trichy District.

Complete

Same work as that described under R. No. 3504

(கு-பு)

இந்நூல் ஆர். 3504-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கும் சுவடியே ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7625

அகத்தியர் திருபுவனக் கண்ணாடி - முன்னூறு
AKATTIYAR TIRUBHUVANAK KAṆṆĀḌI - 300

Palm leaf ; 29 × 3·2 c.m. Foll : 1—46

Lines 8-10 on a page. Tamil. Injured. Old. Extent 1500 granthas.

Presented in 1961 - 62, by Thiru. L. A. Vaiddiyanathan, 13, East Madavala Street, Lalgudi, Trichy District.

Complete

In 327 verses, ascribed to Ahattiyar, This manuscript renders knowledge on Yoga, Medicine, Astrology etc.

Beginning

சீர்பூத்த பொதிகைவளர் மருவும் புசண்டர்
பாதம் திருமால் பாதம்
பேர்பூத்த கணேசனொடு வல்லபை குண்டிலியின்
பாதம் பெரியோர் பாதம்
தார்பூத்த அசுவினியுங் கந்தனோடு
அபிராமி தாளின் பாதம்
நார்பூத்த சுழிமுனைநடு பிரணவத்தின்
ஒளிவாகும் நிலவு காப்பே

ஒளிவதனி லுருவபிறை உயிரும்தீ வினையுங்
கலை உலக மேழுஞ்
சுழிமுனையி லருவதிரு புவன மோடு
சாகரமும் சூழ்ந்து மேவும்

தெளிவுகலை ரவிமதியும் யிடைக் கலைபின்
கலையின் நடு திரிமுக் கோணம்
நெளிவுசுட ரொளிவுதிரி புவன முகக்
கண்ணாடியத்தாய் நிகழ்த்துற் றோம்
நிகழ்த்து மறைப் பொருள்த்னை விருத்தி
அகத்திய னுரைக்க நேமிபாதம்
அகத்திய னருளத்தனையே வணங்கி மிகுத்த
கமலங்கள் தனிலடியேன் போற்று
தகழ்த்தமதி அமிர்த மெனுபூர ணத்தில்
கசியும் பாலதாயு மூட்ட
புகழ்த்தும் விதிநிறஞ் சனமாம் வேதாந்தச்
சாரமதை புகட்டி னேனே

End

பாரு சித்தா முட்டியெனும் மூலியுட
சாறுதனில் பாச்சும் யென்னாள்
தேரும் சடம் முன்பத்தியம் திருபுவனக்
கண்ணாடி செய்தி கண்டு
கோரும் குரு அனுக்கிரகம் யின்னூல்யெட்டும்
வாலையெட்டும் குறியாய் ஆய்ந்து
பேரும் வாத வைத்தியனெனும் உலகமதில்
மென்மேலாய் பெருவாழ் நன்றே

வாழ்வுதரும் அருளும்தரும் சுந்தரிதன்
கிரிகையெய்தும் வசியமெய் தும்
தாழ்வு மில்லை குறைவுமில்லை அனுக்கிரக
சித்தியெய்தும் தரணி யோரில்

வாழ்வ தந்த மதிப்பயனால் செய்த தவப்
பொருட்டதனால் அமிர்தம் சிந்தும்
சேஷதிரு புவனயிந்தக் கண்ணாடி முந்நாறும்
சித்தி முற்றே.

Colophon

சார்வரி வருஷம் கார்த்திகை மாதம் எட்டாந் தேதி வியாழக் கிழமைய தினம் உதிச்சு சாமத்தில் எழுதி முடிந்தது.

லாலுகுடி கீழ் மடவளாகம் தெருவில் சிதம்பர சாஸ்திரி குமாரர் சுப்புராயர் குமாரர் ராமசுவாமி அய்யர் புஸ்தகம்.

(கு-பு)

இந்நூல் அகத்தியர் திருபுவனக் கண்ணாடி - முந்நூறு என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. மொத்தம் முந்நூற்றிருபத்தேழு செய்யுட் களடங்கியுள்ளன. இது யோகம், வைத்தியம், சோதிடம் பற்றிய மூன்று செய்திகளையும் விளக்குகின்றது. அதனால் இப்பெயர் பெற்றது போலும். ஆசிரியர் அகத்தியர் என்று சொல்லப்படுகிறது. சிறந்த நூல். காண்க.

R. No. 7626

இராம தேவர் பல திரட்டு
IRĀMA DĒVAR PALA TIRAṬṬU

Palm leaf: 35 × 3 cm. Foll: 1—49

Lines 5-6 on a page. Tamil. Injured. Old. Extent 500 granthas.

Presented in 1961-62 by Thiru L.A. Vaiddiyanathan, 13, East Madavala Street, Lalgudi, Trichy District.

Complete

Similar work as that described under R.No. 1487.

(கு-பு)

இந்நூல் ஆர். 1487 - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கும் சுவடியைப் போன்றதே ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7627

தன்வந்தரி வைத்திய சிந்தாமணி
DHANVANTARI VAITTIYA CINTAMANI

Palm leaf : 37·8×3 4 c.m. Foll : 1—121

Lines 8 on a page; Tamil. Injured. Old. Extent 4000 granthas.

Presented in 1961-62, by Thiru L. A. Vaiddiyanathan, 13, East Madavala Street, Lalgudi, Trichy District.

Complete

Same work as that described under D. No. 1946.

(கு-பு)

இந்நூல் டி. 1946 - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருப்பதே ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. Nos. 7628-7631 (One Bundle)

Palm leaf ; 33·8×3·8 c.m. Foll : 1—97

Lines 7-8 on a page. Tamil. Injured. Old. Extent 1780 granthas.

Presented in 1961-62, by Thiru. L.A. Vaiddiyanathan, 13, East Madavala Street, Lalgudi, Trichy District.

R. No. 7628

சுந்தரானந்தர் ஞானம் - ஐம்பத்தொன்று
SUNDARĀNANDAR GNĀNAM-51

Foll : 1-10 Extent 160 granthas.

Complete

Same work as that described under R. No. 254 (d)

(கு-பு)

இந்நூல் ஆர். 254(d) - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கும் சுவடியே ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7629

நந்தீஸ்வரர் பிரணவ சூத்திரம் - முந்நூறு
NANDĪSVARĀR PIRAṆAVA SUTTIRAM-300

Foll : 11—58, Extent 1000 granthas.

Begins on fol. 11(a) of the manuscript described under R No. 7628.

Complete

This work in 303 verses is on yoga, Gnana etc., This has been ascribed to Nandhinatha.

Beginning

அள்ளிய கிளருங் கிள்ளை யானைமா முகவன் பாதம்
வெள்ளியங் கிரி யான......ரங்க வேழு மாமுகனே யெந்தன்

வுள்ளினுக் குள்ளாம் யெந்தன் உருவினுக் குருவாய்த் தோன்றும்
பிள்ளையா ரென்றும் பெத்த வேற் மூலாய்ப் படைத்தாய்ப் போற்றி

போர்த்தி யென் றடி வணங்கும் புசுண்ட மாமுனிவன் பாதம்
போத்தியே வணங்கிச் சாலக் கணமெனு முயிரை மாத்தி
ஆத்தியைத் தரித்த சோதி யடியவர்க் கடுமை யாகி
யேத்தியே மனோன்மணித் தாயினை யடி வணங்குவேனே

இணங்கியே குமரனாத யிணையடி வணங்கிச் சாலக்
கணமெனு முடலை மாத்திக் கருத் தினா லீஷன தந்தக்
குண மூளத் தமது பீடக் கொலு நந்தி னாத ரென்னு
மன முற யீஷன மகிழ்ந் தெனக் குரைத் திட்டாரே

End

சேருமென் றியம்பிய செயலரி யாமலே
வேருளங் கொண்டிடவே தானுஞ் சத்தியாம்
யூரருள் பூரணம் பொருந்தா தென்றாளி
நாருள மூலியால் நாமர சாமே.
அரசனாம் நந்தி ஆதியாய் வகுத்து
வரசெரி மொழி வட னூல் . . . ரி மந்திரி

யிர சத யென்னூ லியன்ற முனிகளும்
கர சமக் கொண்டாட காகூறி யின்னூலே
நூலினி லுயர்ந்த னுகண்ட சண்டீசனே
பாலினி லன்னம் பகர்வதாம் முன்னூற்
சாலி நலப் பாலை தசங்கிய சுத்தி
வாலி தன்னருளால் வாழ்வரே

வத்தா குடி நீரும் வாங்காத கட யிடித்யும்
குத்தால நாதருக் குணமோ குழலாரோ
யெத்தா யிருந் துறைந்து யிரவுபக லத்தவற்கு
சித்தாகு மந்தேகம் சிவாலைய மாமெனங் கோளே

Colophon

நந்தீஸ்வரர் பிரணவ சூத்திரம் எழுதி முகிழ்ந்தது. கை நாதுளை சின்து சிதம்பர சாஸ்திரி குமாரன் சுப்புறாயர் சுப்புறாயர் குமாரன் ராமசாமி அய்யர் பொஸ்தகம்.

(கு-பு)

இந்நூல் நந்தீஸ்வரர் பிரணவ சூத்திரம் - முந்நூறு என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. மொத்தம் முந்நூற்று மூனறு செய்யுட் களுள்ளன. இது யோகம், ஞானம் சம்பந்தப்பட்ட செய்திகளைத் தெரிவிக்கிறது. நந்தி தேவர் ஆசிரியர் எனச் சொல்லப்படுகிறது. ஏடுகள் சிதிலமடைந்துள்ளன. நல்ல நூலாகுமிது. காண்க.

R. No. 7630

நந்தீசர் முப்பூ - ஐம்பத் தொன்று
NANDĪSAR MUPPU - 51

Foll : 59—68 Extent 160 granthas

Begins on fol. 59 (a) of the manuscript described under R. No. 7628

Complete

Similar work as that described under R. No. 254 (l).

(கு-பு)

இந்நூல் ஆர். 254(l) - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கும் சுவடியைப் போன்றதேயாகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7630(a)

நந்தீசர் சுருக்கம் - ஐம்பது
NANDĪSAR CURUKKAM - 50

Foll : 69 – 78 Extent 160 granthas

Begins on fol. 69 (a) of the manuscript described under R. No. 7628.

Complete

This treatise, ascribed to Nandhinatha, in 50 verses, advocates methods to prepare medicines like Muppo etc. Yoga school has also been dealt with

Beginning

ஆதி யந்த மூல முத லான சோதி
அரி அயனுங் காணாத தீப நாதம்
பாசி மதி யணி சடை யோன் பாதமான
. . . . . . பச்சை
. . . . . . தானளித்த செந்தூரந்தான்
ஓதி மதம் பொழி யானைக் காதா நாதா
உன்பதம் நம்பி அருள்மூல துஷ்ம
சாதி . . . . ள்ளைக்
கொம்போனே போத்தி போத்தி
சரணமென நந்தியன்றாள் பணிந்திட்டேனே
பணிந்து மனம் களி கூர்ந்து பரத்தைச் சார்ந்தேன்
பாக்கியவான் வேறில்லை பா . . . . . . போலே
. . . .
கனிந்த வெண்ணை கனிபழமும் கற்கண்டு சீனி
கனியருந்து மங்கற்பகமே கண்ணா . . . . . . கண்ணும்
தனிந்த நல்ல சுந்தராநந்தவல்லி தாயாகும் பிள்ளையென தனிப்பேர் கொண்ட
அணிந்தணிந்த . . . வீனுரும்பாவம் பரத்துள் நாடி யிடுமந் தேவா வாரே

End

சாபமெத்த வுண்டாகும் மூலியாலே தப்பாது சத்ததனால் நாவடக்கம்

பாவமில்லை என்றாணை சிவமே சொன்னேன் பராபரி யாள் தான்வாழும் பய;னுமாச்சு

தாபரம் மாபரம் முன்னூறுக்குள் சாத்தின நெக்கமதில் திறந்து விட்டேன்

நாபரமும் தாபரமும் ரசமும் நாடிய தோர் வவ்வும் கணக்கெல்லாம் மூலிதானே

மூலிக்காய் விண்டனப்பா முன்னூறொன்று மூதண்டக் கொள்கைக்கி முன்னூறொன்று

... ... நானுஞ் சொன்னேன்

... ... தாக்கான இதின் சூட்சமம் பாருபத்தைஞ்சு

... ... தப்பாது பார்த்தேறு சண்டீச வாழ்வே

(கு-பு)

இந்நூல் நந்தீசர் சுருக்கம் - ஐம்பது என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இஃது யோகம், வைத்தியம் சம்பந்தப்பட்ட செய்திகளைக் கூறுகிறது. முப்பூ முதலிய மருந்து வகைகள் தயாரிக்கும் முறை களும் காணப்படுகின்றன. ஏடுகள் மிகவும் சிதிலமடைந்துள்ளன. ஆசிரியர் - நந்திதேவர். காண்க.

R. No. 7631

அகத்தியர் சிவயோகம் - நூறு
AKATTIYAR SIVAYOGAM - 100

Foll : 79 - 87 Extent 400 granthas

Begins on fol. 79 (a) of the manuscript described under R. No. 7628.

Complete

Full of teachings of Yoga philosophies in verses and has been ascribed to Akattiyar.

Beginning

அகஸ்தியர் சிவயோகம்

பூரண மாம் பராபரமே போற்றி
புகழ்பெரிய சிவசத்தி தன்னைப் போற்றி
காரணமாய் நாதவிந்து . . . . . போற்றி
கருணை மயேசுவரன் போற்றி ருத்திரன் போற்றி
நாரணனும் நான்முகனும் . . . .
யோகம் விரித்துப் பாட . . . .
தாரணியில் சிவன்முத்தர் சித்தர் கொண்ட
னருளால் சரஸ்வதி . . . யே.

சீர்சிறந்த சிவயோக மப்பியா சிக்க
திறமாக அடிதொடுத்து செப்ப
ஆதி னாதர தான் யிய யாயில பாகம்
. . . ச் சேந்திரர்க்குபதே சித்தார்
பார்சிறந்த சதேறாந்த . . . . . . நன்றாய்ப்
பண்புட னாத்தும் யோகிக்குபதே சித்தோர்
யேர்சிறந்த ஆற்றும் வாம யோகியாரும் . . .
பிறந்திடிக வகையுரைத் திட்டாரே.

End

முதல்வனாம் பேரை வெகுவாகச் சொல்வார்
மூர்த்தி யென்ம பராஆர்த்தி யென்பார்
முப்பா ளென்பார் காதலானவ ரென்பார்
வளிதானென்பார் கற்பக சுந்தர மென்பார்
ஆதிஅந்த மென்பார் அதல்லவென்பார் இதல்லவென்பார்
அம்பர நாதனென்பார் அகண்டபரி பூரணமென்பார்
மாயம் சோதியென்பார் அமுதவனார்பேரை வெகுகோடி
யாக மொழிந்திடுவார் வழுத்துவது ஒன்று காணே.

ஒன்றாக காண்பதும் கண்காட்சி யாகும்
மூலமதில் தெய்வமல்லால் பரமே கண்டாய்
நன்றாக உருக்கொண்டு பார்த்தோர்க் கெல்லாம்
நலமான காய சித்திவாத சித்தி யெட்டெட்டுமாகும்
ஒன்றான தொன்றுதான் அவன் தானே யல்லால்
ஒருமிக்க சொன்னாலும் வாராதுலகத் தோர்க்கு
சென்றேதான் குருவருளை பெற்றயேற் றனக்கு
சிவயோகம் சிவக்கியானம் எய்துமது முற்றே.

Colophon :

சிதம்பர சாஸ்திரி குமாரன் சுப்புறாயர் சுப்புறாயர் குமாரன் றாமசாமி பொஸ்தகம். ஊகயிலு கைபஞ்சதை ஸ்வாமி . . . கைசாமி துணையாகவும். சிவயோகம் எழுதி முகிழ்ந்தது.

(கு-பு)

இந்நூல் அகத்தியர் சிவயோகம் நூறு என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. யோகம் பற்றிக் கூறுகிறது. இஷ்ட சித்திகளை அடைவதற்கு யோக மார்க்கமே சிறந்தது என்கிறது இந்நூல். ஏடுகள் சிதிலமடைந்துள்ளன. அகத்தியர் இயற்றியதாகச் சொல்லப் படுகிறது. காண்க.

R. No. 7632

இராமதேவர் சூத்திரம் - ஐநூறு
IRĀMADĒVAR SUTTIRAM - 500

Sritala : 30·2 X 4·5 c.m. Foll : 1 - 72

Lines 8-10 on a page. Tamil. Injured. Old. Extent 1800 granthas.

Presented in 1961 - 62, by Thiru L. A. Vaiddiyanathan, 13, East Madavala Street, Lalgudi, Trichy District.

Incomplete

Same work as that described under R. No. 201(a).

(கு-பு)

இந்நூல் ஆர். 201(a) ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருப்பதே ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7633

அகத்தியர் வைத்திய பரிபூரணம் - நானூறு
AKATTIYAR VAITTIYA PARIPURANAM - 400

Palm leaf ; 39·5 × 3 c.m. Foll : 1—65, 1—10

Lines 6 on a page. Tamil. Injured. Old. Extent 1500 granthas.

Presented in 1961 - 62, by Thiru L. A. Vaiddiyanathan, 13, East Madavala Street, Lalgudi, Trichy District.

Complete

Same work as that described under R. No. 192(a)

(கு-பு)

இந்நூல் ஆர். 192(a) - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கும் சுவடியே ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7634

பல வகைப் பாடல்கள்
PALA VAKAI-P-PĀḌALKAḶ

Palm leaf ; 9·5 × 3 c.m. Foll : 1—50

Lines 7-8 on a page. Tamil. Injured. Old. Extent 550 granthas.

Presented in 1961 - 62, by Thiru L. A. Vaiddiyanathan, 13, East Madavala Street, Lalgudi, Trichy District.

Incomplete

A collection of small works on Mantras, Chakras and medical methods. Compiler, not known.

Beginning

அகத்தியர் புனை சுருகு மாலை

சீருலவும் அஸ்ட்டம் காமம் வெட்டு வகைத் தொழிலும்
தெரிந்தெடுத்த புளிசுருட்டை தெளிவாகக் கூற
காருவனம் ஐங்கரனை குஞ்சற குமாரன் கங்கை
. . . . . . யிரவனுடைய சிவன் மாலுங் காப்பு.

வாருலவும் வானபாடி மாது திருமாலை
வாழ்த்தி மனம் தேத்தி பயன் சாத்தரிய கேளீர்
பேருலவுந் தான் தவமான சிவயோகி
பெரியோர்கள்க் காகுமதில் பேசுங்கருத் தானே
பத்திர மாய்த் தானடைத்து பதனமிக செய்யே.

செய்யவே மந்திரமும் கிலிவாவா வென்றாது
திருநீறும் தீப்பாய்ந்த கன்னி யுடனீரும்
மெய்யவே தலை . . . .
தானொன்ன சுருட்டு கருவதுனஞ்
சொல்வேன் . . . .

End

அரவம் நின்ற நிலை
நிற்கும் சிவம்
ஓ. அவவும் உ
நெருப்பினில் பிறிதிவு
சக்கரம் புதன் செவ்வாய்

அரவம் நின்ற நிலை
பெரும வாடும்
சிவம் அவ்வுஞ் சிவாய
நம புதன் சந்திரன்
அரவ மோடும்

சிவம் வசிய வசியம்
புதன் சனி

(கு-பு)

இந்நூல் பல்வகைப் பாடல்கள் என்னும் பெயர்த்து. முற்றுப் பெறவில்லை. இது வைத்தியம், மந்திரம் சம்பந்தப்பட்ட செய்திகளைக் கூறுகிறது. அவை சம்பந்தப்பட்ட பல தனித்தனி ஏடுகள் ஈண்டுத் தொகுக்கப்பட்டுள்ளன. ஏடுகள் சிதிலமடைந்துள்ளன. சில சக்கரங்களும் விளக்கப்படங்களுடன் காணப்படுகின்றன. காண்க.

R. Nos. 7635-7638 (One Bundle)

Palm leaf; 31 × 4 c.m. Foll: 1—264

Lines 14-15 on a page. Tamil. Injured. Old Extent 11,250 granthas

Presented in 1961 - 62, by Thiru L. A. Vaiddiyanathan, 13, East Madavala Street, Lalgudi, Trichy District.

R. No. 7635

திருத்தொண்டத் தொகை
TIRUTTOṆḌAT TOKAI

Fol: 1 only Extent 100 granthas.

Complete

Same work as that described under D. No. 1151.

(கு-பு)

இந்நூல் திருத் தொண்டத் தொகை என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இஃது டி. 1151 - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருப்பதே ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7636

நம்பியாண்டார்நம்பி திருவந்தாதி
NAMBIYĀṆḌĀRNAMBI TIRUVANTĀTI

Foll : 2-5 Extent 450 granthas.

Begins on fol. 2(a) of the manuscript described under R. No. 7635.

Complete

Same work as that described under D. No. 1205

(கு-பு)

இந்நூல் டி. 1205 -ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருக்கும் சுவடியேயாகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7637

திருத்தொண்டர் புராணம்
TIRUTTOṆḌAR PURĀṆAM

Foll : 6-253 Extent 10,200 granthas

Begins on fol. 6(a) of the manuscript described under R. No. 7635.

Complete

Same work as that described under D. No. 624.

(கு-பு)

இந்நூல் டி. 624-ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருப்பதே ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. No. 7638

சேக்கிழார் புராணம்
SEKKIḶĀR PURĀṆAM

Foll : 254—264, Extent 500 granthas.

Begins on fol. 254(a) of the manuscript described under R.No. 7635.

Complete

Same work as that described under D. No. 584.

(கு-பு)

இந்நூல் டி. 584 - ஆம் எண்ணில் வருணிக்கப்பட்டிருப்பதே ஆகும். அதன் குறிப்புங் காண்க.

R. Nos. 7639-7640 (One Bundle)

Palm leaf 35·2×2·8 cm. Foll 1—117

Lines 5-6 on a page. Tamil. Injured. Old. Extent 1600 granthas.

Presented in 1961 - 62, by Thiru. L. A. Vaiddiyanathan, 13, East Madavala Street, Lalgudi, Trichy District.

R. No. 7639

அகத்தியர் தத்துவம் - முன்னூறு
AKATTIYAR TATTUVAM - 300

Foll : 1-93 Extent 1200 granthas.

Complete

All the 317 verses here throw light on medical practices, preparation of medicines and Advaita philosophy. This has been ascribed to Akattiyar.

Beginning

அத்துவித ஞானமெனுந் தத்துவஞா னத்தை
சித்திபெறு வாரறிவார் பித்தரறி யாரே
தத்துவநூல் தன்னை யறிந்தேத் தொழிலுசெய்வா
ரகத்துச் சமையங்கள் பலவித்தை யறியாரே
ஆதிய கத்திய ரோதிய தத்துவம்
மேதினியா ராய்ந்தவர் தீதிலாச் சித்தரே

மணிகொண்ட யானையெட்டுந் திசைகளெட்டு
மலைகளெட்டு மதியீரெட்டுங்
கணிகொண்ட வியாக் கிறுதி யேழுமண்ட
மேழுமொரு கடல்களேழும்
பணிகொண்ட பூதமஞ்சுந் தருக்களஞ்சுக்
கலைகளஞ்சும் பதிகளஞ்சும்
அணிகொண்ட மறைநான்கும் புவனமெல்ல
படைத்தவன்தன் அடிகள்காப்பாம்

ஆச்சப்பா யிம்மணியைப் புடசெய்யக் கேள்
அடாவங்கி தனிதோளைக் கட்டியெ
ஓச்சப்பா படிகம்போல் இறுகிப் போகும்
உத்தமனே ஊமத்தங் காயில் மூப்ப
நீச்சப்பா விளங்காய் தன்னில் வைத்து
நேர்மூப்பான் பிடகோடான் கிழங்கில் வைத்த
போச்சப்பா மூவேழு பிடமும் போட்டுப்
வெந்தோன்றிக் கிழங்கில் வைத்து

End

போமப்பா முன்னூறு சூத்திரத்தி னுள்ளே
புகண்டநூற் றெண்கற்பம் பிறகு கொள்ளு

ஆமப்பா யெண்ணூறு சூத்திரத்தி னுள்ளே
அறைந்திட்ட திராவகத்தை முறையாய் வாங்கி
ஏமப்பா இரும்புமுதல் உபரசங்க ளெல்லாம்
ஈயம்போல் உறுதிநன்றாய்த் தங்கஞ் சேத்து
காமப்பா கெந்தியிட்டுச் செந்தூ ரித்துக்
கைமுறையாய்க் கொல்லஅஷ்ட சித்தியுண்டு

உண்டபின்பு குளிகைசெய்து சாரணைக ளெல்லா
உறுதியா யென்மகனே யெல்லாந் தீந்து
விண்டபின்பு ஆயிரத்தெட் டண்டம் பாத்து
விளையாடிப் பெரியோரைத் தெரிசித் தேத்திக்
கண்டபின்பு பொதிகைக்கென் னிடத்தில் வந்து
காஷாயம் என்னிடத்தே வாங்கிக் கூட்டி
தொண்டருடன் கூடியே சுகத்தில் வாழ்வீர்
சுகமான காயசித்தி சுருக்க முற்றே

Colophon :

அகஸ்தியர் அருளிச்செய்த தத்துவ நூல் முத்து. லாலு கெடி கீழ் மடவலாத் தெருவில் சிதம்பர சாஸ்திரி குமாரன் சுப்புறாயற் குமாரன் ராமசுவாமி பொஸ்தகம் சிவபஞ்சனத கல்லியான் சிவன்.

(கு-பு)

இந்நூல் அகஸ்தியர் தத்துவம் முன்னூறு என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. வைத்தியம், தத்துவம் முதலியவை சம்பந்தப்பட்ட செய்திகளைக் கூறுகிறது. காண்க.

— —

R. No. 7640

புலத்தியர் பாடல் வைத்தியம்
PULATTIYAR PĀḌAL VAITTIYAM

Foll : 94 - 117 Extent 400 granthas

Begins on fol. 94 (a) of the manuscript described under R. No. 7639

Complete

Being a medical work it describes elaborately some modes of preparation of medicines in 102 verses.

Author is Pulastiya, disciple of Dhakshinamoorthy.

Beginning

திருவளரும் தென்பொதிகை தன்னில் வாழும்
தெட்சிணா மூர்த்தியுட சீட னான்
குருமுனி பாலனென்னும் புலத்தியனா மடியேன்
கூறுகிறேன் வயித்தியசூத் திரத்தை யானும்
பருவமுடன் யென்றந்தை பாடல் தோய்ந்து
பண்பான நாதாக்கள் பாதம் போற்றி
உறுதியுடன் மனந்தோய்ந்து பலநூல் பார்த்து
உத்தமர்க்கு வயித்தியத்தைச் சொல்லு றேனே

சொல்லுகிறேன் பொன்வெள்ளி யிரும்பு செம்பு
தோர்த்த னாகங் காரீயம் மஞ்சு
மல்லுகிற வெள்ளீயம் பித்தளையி னோடு
வகையாக ஒன்பதையும் பற்பஞ் சொல்வேன்
கொல்லுகிற மித்திறத்தின் வகையைக் கேளு
கோமியமோர் காடியெண்ணை எருக்கம் பாலும்
வெல்லுகிற பழச்சாறுங் கான சாற்றில்
வெவ்வேறாய் ஒவ்வொன்றி லுருக்கிச் சாயே

End

செய்திடு முன்போல் தீர்க
　　மாய்மண் ணெண்ணை செய்து
பையவே முழங்கால் மட்டும்
　　பாலிடு எருமேல் கூட்டி
அய்யமில் லாமல் வைத்து
　　அதிகெசப் புடத்தைப் போட்டு
வெத்திவேல் ஐங்கரனைப் போத்தி
　　வேண்டியே யெடுத்துக் கொள்ளே

எடுத்தொரு பணந்தான் தூக்கி
　　யிடுதிரி கடுகு தூளிற்
அடுத் தொரு பத்துநாட் குள்ள
　　அஷ்டகா சங்க ளீளை
தொடுத்துமந் தார காசஞ்
　　சுவாசகா சங்கள் பாண்டு
விடுத்தொரு காதம் போகும்
　　மேன்முனி விளம்பி னாரே

Colophon :

புலத்தியர் பாடல் முற்றித்து. சிதம்பர சாஸ்திரி குமாரன் சுப்பறாயர் சுப்புறாயர் குமாரன் றாமசுவாமி பொஸ்தகம் சங்கரன் துணை.

(கு-பு)

இந்நூல் புலத்தியர் பாடல் வைத்தியம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. மொத்தம் நூற்றிரண்டு செய்யுட்களைக் கொண்டது. வைத்தியம் சம்பந்தமானது. பலவித மருந்துகளையும் தயாரிக்கும் விதங்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றது. காண்க.

R. No. 7641

கும்பமுனி பரிபூரணம் - ஆயிரத்திருநூறு
KUMBAMUNI PARIPURAṆAM - 1200

Palm leaf ; 38 × 3·5 cm. Foll : 1—214

Lines 7 on a page. Tamil. Injured. Old. Extent 6000 granthas

Presented in 1961-62, by Thiru L. A. Vaiddiyanathan, 13, East Madavala Street, Lalgudi, Trichy District.

Complete

Ascribing to Kumbamuni, this manuscript in verses, furnishes ways of Yoga and medical practices.

Beginning

ஹரி ஓம், கும்ப சம்ப முனி பரிபூரணம்.

பூரணமாய் நிறைந்தபரி பூரணமே காப்பு
போதமய மான பூரணத்தைப் பாடக்
காரணமாய் கருவுருவாய் யெங்கும்நிறைந் திருந்த
கண்மணியின் நடுவாகி கருணைதரும் பொருளை

ஆரணமாய் மூக்கொன்ற தடியில் நடுவாகி
அசையாத பொருளாகி யருளுருவு மாகி
வாரணமாய் மூலமதில் நந்தியெனும் பிள்ளை
வாசியொனும் பூரணம னோன்மணிகாப் பாமே.

ஆமப்பா பூரணத்தை யனுதினமும் நோக்கி
அதினுடைய விபரமதை ஆறறிந்து சொல்வார்
நாமப்பா சொல்லுதற்கு னாவில்வலு வுண்டோ
நாதாந்த மனோன்மணியின் நடுவழியின் கிருபை

சோமப் பால் கொண்டுபரி பூரணத்தைக் கண்டால்
துலங்குகின்ற பூரணத்தால் சோதியுட கிருபை
தாமப்பால் அல்லது வேறுபொரு ளில்லை
தன்னிலையைத் தானறிந்து தாரணியைக் காரே.

ஆமப்பா ஊத்துமுறை துருத்தி கேளு
அப்பனே ஊத்துக்குத் துருத்தி யொன்று
நாமப்பா உருக்கினத்துக் கையா கேளு
நாட்டமுடன் துருத்தியது ரெண்டே யாகும்

தாமப்பா சகலமுமே சத்து வாங்க
சங்கையுடன் சொல்லுகிறேன் துருத்தி னாலு
ஓமப்பா யிம்முறையாய்ப் பாத்தா யானால்
உத்தமனே சகலமுமே சித்தி யாமே

End

வெளியான வெளியதுதான் பரசொ ரூபம்
வேதாந்த சொரூபமடா சொரூபா னந்தம்
பளியான அந்தமடா சொரூபா னந்தம்
மகத்தான பூரணமாம் அந்தங் கண்டு
நெளியான ஆதாரங் கடந்தப் பாலே
நெருப்பாறு மயிற்பாலம் வழியே சென்று
அளியாத பரமவெளி வெளியோடே வெளியாய்
ஆனந்த பூரணமா யமருவது முத்தே

முத்தான புலத்தியனே அய்யா கேளு
முழுதுமிதை ஆதிதொடுத் தந்த மாக
சித்தாக நின்றபரி பூரணத்தை நீயும்
செம்மையுடன் பூரணமாய்ப் பார்த்தா யாகில்
வத்தாத பாக்கியமும் வயது சித்தி
மகத்தான யோகமொடு ஞானஞ் சித்தி
வித்தான யோகமொடு ஞானஞ் சித்தி
வேதபர வெளியில்மனம் வெளிசேர் முத்தே

Colophon :

லாலு கெடியில் கோவில் மடவலாத் தெருவில் சிதம்பர சாஸ்திரி குமாரர் சுப்புறாயர் சுப்புறாயர் குமாரர் றாமசுவாமி பொஸ்தகம். நடறாசுயிடம் பஞ்சனத சுவாமி கல்லியான சிவணங்கை கைங்கிறியம். குருஉபதேசம். மார்கழி 26 சத்து ருஷி கோவில் ஆலயத்தில் யிடமங் கைங்கிறியம் குரு உபதேசம்.

(கு-பு)

இங்கு நன்னெறி என்றது உத்தராயணம் எனப்படும் தேவ யானத்தையாம். அவ்வழியே சென்றோர் மீளாத வாழ்வு, பெறுவர். மற்றொன்று மீட்சியுள்ள வழியாம். மரண காலத்தில் இந்த நினைப் போடு செல்வோர் மீளாத வாழ்வு பெறுதல் உறுதியென்பது இம் மந்திரக் கருத்தாம். இம்மீளா நெறி அர்ச்சிராதி மார்க்கம் என்றும் உரைக்கப்படும். மற்றொரு வழி பித்ரு யானம் தூம மார்க்கம் தக்ஷி ணாயனம் என்று சொல்லப்படுவது. அர்ச்சிராதி மார்க்கத்தார் செல்லும் ஆன்மா தரமபதம் பெறும். தூம மார்க்கத்தார் சென்ற ஆன்மா சந்திரலோக வாழ்வு பெறும்.

இந்நெறிக்குத் தகுதி பெறாத பிறரெல்லாம் தாம் பண்ணிய புண்ணியத்துக்கேற்ற உயர் வாழ்வு பெற்று உரிய காலத்தை அங்கே கழித்துவிட்டு மீண்டும் உடம்பு பெற மண்ணுலகம் நோக்கி வருவர்.

Colophon :

சாந்தி

பூரண மதுவே . . . . பூரணமாகவே,
ஓம் சாந்தி; சாந்தி; சாந்தி
இந்நூல் ஈசோப நிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது.

R. No. 7767

கே நோப நிடதம்
KĒ NŌPA NIḌATAM

Pages : 11-27 Extent 250 granthas.

Begins on pages 11 of the manuscript described under R. No. 7766.

Complete

This Upanishad of Sama Veda is also a Tamil translation from Sanskrit in poetic form, The author, N. Kanagarajaiyer, same as mentioned earlier, himself has written a commentary.

Beginning

முன்னுரை

கேநோப நிடதம் சாம வேதத்தைச் சார்ந்தது. தல வாகார சாகைக்குரியது. ஆதலின் தலவாகார உபநிடதம் எனப்படும். கேந என்ற முதன் மொழியுண்மையால் இவ்வுப நிடதம் கேநோப நிடதம் என்ற பெயர் பெற்றது. 'கெட்டதைக் கேநத்தில் தேடு' என்றதோர் பழமொழி உண்டு. அதன் பொருள், 'உலக மக்கள் அறிவின் எல்லைக்கு அகப்படாது மறைந்த பிரமப் பொருளை இந்த உபநிடதத்திலே தேடி அடைய வேண்டும்' என்பதாம். இவ்வுபநிடதம் வினாவிடை உருவமாய் அமைந்துள்ளது. இதன் அருமை அறிந்தே சங்கரர் இதற்குப் பதபாஷ்யம், வாக்கிய பாஷ்யம் என்ற இரண்டு உரைகள் இயற்றியுள்ளார். இதன் கண் ஒரு அழகிய கதை மெய் விளக்கமாக அமைந்துளது.

முற்கூற்று

இயல்வலி பெறுக வெனதுட லுறுப்பும்
நாவும் உயிரும் நல்விழி செவிகளும்
உடலின் வலிமையும் உளபிற பொறியுமே
இவையெலாம் மறைமுடி யியம்பும் பிரமமே;
என்று மதைமறா வியல்பையான் பெறுக
மற்றப் பிரமமும் மறாதெனை யேற்க
பிரம மறுப்பே பிறவா தொழிக;
என்னையும் பிரமம் இகழா தருள்க
மறைமுடி நிலவிய அறநெறி யனைத்தும்
ஆன்ம வேட்கையேன் அடியேன் பெறுகவே.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(கு-ரை)

இச்சாந்தி மந்திரம் சாமவேத உபநிடதங்களின் முன்னும் பின்னும் ஓதப்படுவதாம்.

நூல்

முதற்கண்டம்

1. எதனால் மனமே இயக்கம் பெறுவது?
எதனால் உயிருணர்வு இயங்க லாகும்
எதனால் நாவிவை இயம்ப இயலும்?
எவ்வொளிப் பொருளால் இயலும் விழிசெவி?

(கு-ரை)

மனம் மற்றப் பொறிகளை இயக்குவது என்றே தோன்றுமாயினும் மனத்தையும் உயிருணர்ச்சியையும் இயக்க வேறொரு சக்தி வேண்டுமே, 'அது யாது' என, அறியவிரும்பும் சீடன், வினாவைப் போன்று, இம்மந்திரம் அமைந்துள்ளது.

End

8. தவமும் அடக்கமும் தக்கநல் வேள்வியும்
அதன்கழ லாகும் அங்கமே மறைகளாம்
உண்மையே யதனுக் குறையுளா மென்க.

(கு-ரை)

உரைத்த உபநிடதப் பொருளினை அடைதற்கு உபாயம் தெளிவுறுத்தப்படுகிறது. தவம் என்பது உடல் பொறி மனங்களை ஒருவழிப்படுத்தல். அடக்கம் என்பது உபசாந்தியாம். கருமம் என முதல்நூல் மொழிந்த பொருள் இங்கு வேள்வி என உரைக்கப்பட்டது.

9. இங்ஙனம் யாவன் இதனை அறிந்தவன்
அவனே தீதெலாம் அழித்து வென்றுபின்
உயர்பே ரின்ப முறுபவ னாகுமே.

(கு-ரை)

இங்ஙனம் இப்பொருளைப் பற்றிய மெய்யறிவு படைத்தவன் ஈறிலாப் பேரின்பம் பெறுவானவன்.

Colophon :

இயல்வலி . . . . பெறுகவே

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(கு-பு)

இந்நூல் கேநோபநிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப்பெற்றது.

R. No. 7768

கடோபநிடதம்

KATŌPANIḌATAM

Pages : 28 - 101 Extent 1150 granthas

Begins on pages 28 of the manuscript described under R. No. 7766.

Complete

These Tamil poems are a Tamil Translation of Sanskrit Upanishad attached to Krishna Yajur Veda. Author Kanagarajaiyer same person noted earlier, has rendered an explication to his own stanzas.

Beginning

கடோபநிடதம், காடகோபநிடதம் என்றும் வழங்கும். கடவல்லி உபநிடதம் என்ற பெயரும் இதற்கு உளது. இது கடமுனிவர் கண்டு உணர்த்தியதாதலின் இப்பெயர் பெற்றதென்ப. நசிகேதஸ் என்ற முனி மகனுக்கும், தென்றிசைக் கோனுக்கும் இடையில் நிகழ்ந்த சம்வாதமாக இவ்வுபநிடதம் அமைந்துளது. இது மிகவும் எளிய நெறியில் உயர்ந்த தத்துவங்களை நன்கு விளக்குகின்றது. கிருஷ்ண யஜுர் வேதத்துக்கு உரியது இவ்வுப நிடதம் என்பார் பலர். வேறு கருத்து உரைப்பாரும் உளர்.

முற்கூற்று

பிரமம் என்ற பெரும்பரம் பொருளே
அளிக்க நம்மை வளர்க்க நம்மையே
யாமிரு வேமும் இயல்வலி மிகப்பெறீஇ
உழப்பே மாகுக ஒளியொடு விளங்குக
நாம்பயில் பயிற்சி நல்வலி படைத்தே
பகையிலா நெறியில்லாம் பயில்வே மாகவே

(கு-ரை)

இந்த உபநிடத்துக்குரிய சந்தி மந்திரம் நம்மைக் காக்க என்று தொடங்குகிறது. பிரமம் என்பது முதனூலில் தோன்றவெழுவாயாக உள்ளது. தமிழ் மொழி பெயர்ப்பில் விளக்கமாய் உரைக்கப் பட்டது.

முதல் அத்தியாயம்
முதல் வல்லி

1. வானவள் வேட்கு வாசச் சிரவசர்
விசுவ சித்தெனும் வேள்வியில் தம் பொருள்
அனைத்தையும் வழங்கினார்; அவர்க்கொரு மைந்தன்
நசிகேத சென்னும் நல்லோன் உளனே.

(கு-ரை)

இந்த உபநிடதம் இரண்டு அத்தியாயம் உள்ளது. ஒவ்வொரு அத்தியாயத்திலும் மூன்று வல்லிகள் உண்டு. இதற்கு உரை செய்யத் தொடங்கு முன்பு சங்கரகுருவரர் "பகவானும் வைவசுவதனும் மிருத்யுவும் ஆகிய பிரமவித்யா ஆசாரியனுக்கு வணக்கம்" என்று கூறித் தொடங்குகின்றார்.

End

18. தென்றிசைக் கிறைவன் தெரித்தவிப் பொருளையும்
போக நெறியையும் உணர் நசி கேதா
மாசுக ளகன்று மரணமுங் கடந்து
பிரம பாவம் பெற்றன னென்ப
இங்ஙனம் உள்ளுயிர் யாவனே யுணரினும்
அவனுமப் பேரின் படைபல னாகுமே

(கு-ரை)

இவ்வுபநிடதத்துள் வந்த இயமநசிகேத சம்பாபுண ரூபமான விருத்தாந்தத்தை இம்மந்திரத்தோடு பூர்த்தி செய்தவாறு எமன் உரைத்த இந்நப் பிரமவித்தையும் அதை அடைதற்குரிய யோக மார்க்கமும் உபகரணங்களோடு பலம் பெறுமறை உரைத்து.

இக்கருத்துக்களை ஓதலும் கேட்டலும் உணர்தலும் வல்லவர் பிரமபாவம் பெறுவர் என்றவாறு.

Colophon :

சாந்தி
பிரமம் . . . . ஆகவே
ஓம் சாந்தி சாந்தி சாந்தி
ஆறாம் வல்லி முற்றும்
கடோப நிடதம் முற்றும்

(கு-பு)

இந்நூல் கடோபநிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது

R. No. 7769

பிரசினோப நிடதம்
PIRASINOPA NIḌATAM

Pages : 102-153 Extent 800 granthas

Begins on page 102 of the manuscript described under R. No. 7766.

Complete

The Upanishad of Adarvaveda is a Tamil translation from Sanskrit. The poems and prose rendering of them are a testimony to the author N. Kanagarajaiyer, mentioned earlier.

Beginning

பிரசினோபநிடதம் என்பது ஆறு சீடர் வினவிய வினாக்களும் அவ்வினாக்களுக்குப் பிப்பலாத முனிவர் அருளிய விடைகளும் கொண்டது. இதனால் இதற்கு ஷட் பிரசினோப நிடதம் என்ற பெயரும் உண்டு என்பர். இது அதருவவேதத்தின் பிம்பலாத சாகையைச் சேர்ந்தது. இவ்வுபநிடதம் முண்டகமாண்டூக்கிய உபநிடதங்களோடு இசைத்து ஆய்ந்து உணர்தற்குரியது. இம் மூன்றும் ஒரு கொத்திற் கனிந்த மூன்று கனிகள் போல உள்ளன. ஒரு பொருளையே வேறு பிரகாரத்தாற் சொல்கின்றன.

முதற் பிரசினம்

1. பாரத் துவாச சுகேசரும் சைப்பிய
சத்திய கலமரும் சௌரியா யணியாம்
கார்க்கிய முனியும் கௌச லியராம்
ஆசுவலா யனரும் பார்க்கவ ராகிய
வைதருப்பரும் காத்தியா யனராம்
கவுந்தியு மென்னக் கழறிய விண்ணவர்
பிரம பரராய்ப் பிரம நிட்டராய்
பிரமமே நாடுறும் பேரறி வுடையராய்
அஃதெலாம் இவர்நமக் கருளுவ ரென்னச்
சமிதை கரத்தே தாங்கின ராகிப்
பிப்ப லாதராம் பெரியரை யடைவரே.

(கு-ரை)

முண்டக மந்திரத்தில் உரைத்த பொருளின் விளக்கமாக இப்பிரமாணம் எழுகின்றது என்பர் சங்கர குருவரர். சுகேசா என்ற பெயர் பூண்டபரத் துவாச குமாரர் ஒருவர். சத்திய காமர் என்ற பெயர் பூண்ட சிபியின் மைந்தர் மற்றொருவர். கார்க்கியர் என்ற பெயர் பூண்ட சூரியன் மகனுக்கு மகனான வேறொருவர். இவர் கார்க்க கோத்திரத்திற் பிறந்தவராக வேண்டும்.

End

சாந்தி

தேவர்காள் கேட்கயாம் செவிகளால் நலனே
தொழுதகு பெரியீர் விழிகளால் நலனே
காண்பே மாக வேண்டுது நுமையாம்
பாடுவேம் நும்புகழ் படைத்த நாளெலாம்.
உள்மிகு முடலொடும் உறுப்பொடும் வாழவே.
புகழ்மிகு மிந்திரன் மிகுநலன் அருள்க
புரவல ராகிய பெரிய தேவர்கள்
நலனமக் கருள்க ஞாயிறுப் பெயர்பூண்
தடைபடா வுருளுடைத் தகுபெருந் தேரோன்.
நலனமக் கருளுக நாவின் தலைவனும்
நமக்கு நலனருளி நன்று புரக்கவே,

Colophon :

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(கு-பு)

இந்நூல் பிரசினோபநிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது.

R. No. 7770

முண்ட கோப நிடதம்
MUṆḌA GŌPA NIḌATAM

Pages : 154-181 Extent 430 granthas

Begins on page. 154 of the manuscript described under R. No. 7766.

Complete

A Tamil rendering of Sanskrit Vpanished called Mundakopanished by N. Kanagarajaier. He is the author for both the verses and commentary of this work.

Beginning

முண்டகோப நிடதம் என்பது அதருவ வேதத்திலே சௌனகீய சாகைக்குரியது. இது துறவிகளுக்கு மெய்யறிவு கொளுத்தத் தோன்றியதால் முண்டகம் என்ற பெயர் பெற்றது என்பர். முண்டனம் செய்தல் என்பது தலைமழித்தல் என்ற பொருள் உள்ளது. அவித்தையையும் மனக் குறைகளையும் மழித்து மெய்த்துறவு அளிக்க வல்லதாகையால் இவ்வுபநிடதம் இப்பெயர் பூண்டது. இதன் அத்தியாயங்களும் முண்டகம் எனவே வழங்கும்.. இதன் கண் மூன்று முண்டகங்கள் உண்டு.

முதற் கண்டம்

1. உலகின் தலைவன் உயிர்களின் காவலன்
பிரமன் தேவருட் பிறந்தனன் முதற்கண்
எவ்வகை வித்தையும் இருப்பதாம் பிரம
வித்தையை யவனே மேதகு முதன்மகன்
அதருவன் பெறுகென வருளின னன்றே.

(கு-ரை)

பரவித்தையான பிரம வித்தை நிலவுலகத்துக்கு வந்த வழியை உரைக்கின்றன மூன்று மந்திரங்கள். அவற்றுள் இது முதலது. பிரமன் இந்திராதி தேவருக்கு முன் பிறந்தவன். திருமாலின் முதல் மகன். அவன் விசுவ கர்த்தா எனவும் புவனகோப்தா எனவும் இம் மந்திரத்தில் உரைக்கப்படுகின்றான். அம்மொழிகள் உலகின் தலைவன் உயிர்களின் காவலன் என்று மொழி பெயர்க்கப்பட்டன. பிரமவித்தை பிரமத்தையறியும் வித்தை. பிரமனால் முதலிற் போதிக்கப்பட்ட வித்தையுமாம். அதுவே எல்லா வித்தைகளுள் நிலையாக நிற்பது.

End

10. வினையும் தவமும் வியத்தகு பிரமமும்
யாவுமா யிருப்போன் இன்ன புருடனே
இதயத் திருப்பனென் றிவனை யறிவோன்
அன்புள சிறுவ வவிச்சைக் கட்டறுத்து
ஈண்டே வீட்டினை யெய்துவா னாகுமே.

(கு-ரை)

இங்ஙனம் எல்லாம் புருடனிலிருந்து பிறந்தன. ஆதலால் வாசாரம் பணம் என விகாரமே நாமதேயம். ஆதலால் இவையெல்லாம் பொய்யே. அபிருதமான் புருடன் ஒன்றே மெய்யாம். ஆதலால் இந்த உலகம் எல்லாம் புருஷ மயமே. புருடனின் வேறாக உலகம் என்பது ஒன்று இல்லை.

இங்கு உயிரோடு வாழப் பெறும் போதே ஜீவன் முக்தன் ஆகின்றான். இவன் உடம்பு நீங்கிய பிறகே முக்தி பெற வேண்டும் என்பது இல்லை. அன்புள சிறுவ என்றது சீடனை விளிக்கும் மொழியாம்.

Colophon :

இரண்டாம் முண்டகத்தில் முதற்கண்டம் முடிந்தது.

(கு-பு)

இந்நூல் முண்டகோப நிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது.

R. Nos. 7771 - 7781 (One Volume)

Paper : 34 × 22.5; c.m. Pages ; 1—348

Lines 25-50 on a page. Tamil. Fair. Old. Extent granthas.

R. No. 7771

ஈசோப நிடதம் - மூலம்

ĪSŌPANIḌATAM - Text

Pages : 3 - 5 Extent 50 granthas

Complete

A Tamil form of the Sanskrit Upanished named Isopanishad. Author of these Tamil stanzas is N.Kanagarajiyer, 20th century.

Beginning

துதி

1. பொருள்தெரி மறையினுட் பொருளாம் பொருளினை
மனமுற நினைந்து மறைமுடிக் கருத்தைப்
பைந்தமிழ் மொழியினிற் பகரத் தொடங்குவாம்

குருதுதி

2. ஒருமை யொருபொருள் உலகினுக் கருளிய
பரம குருவார் பதமலர் பரவுபு
மறைமுடி தமிழால் வழங்கத் துணிதுமே

முற்கூற்று

பூரணம் அதுவே பூரணம் இதுவே
பூரணத் திருந்து பூரணம் பிறந்தது
பூரணத் தலகிலாப் பூரணம் தோன்றியும்
பூரணம் விஞ்சுறும் பூரண மாகவே

உபநிடதம்

1. உலகிடைப் பிறக்கும் ஒவ்வொரு பொருளும்
இறைவனு ளடங்கும் இயல்பே யுள்ளது
அவாவினை யறுத்தலால் ஆன்ம வுணர்வுறீ இப்
பிறர்பொருள் வெஃகாப் பெருவாழ் வுறுக

2. உறுவினை இயற்றியே ஒருநூறாண்டு
வாழ்வுற விரும்புக வல்வினை நின்னைப்
பிணியா தொழியப் பிறிதொரு நெறியிலை

3. ஆன்ம நிலையினை யறியா தழித்தவர்
கண்ணொளி கெடுக்குங் காரிருள் கவிந்த
அசுர வுலகம் அடைதல் உறுதி
யெடுத்த வுடலினை யிழக்கு நாளினே.

End

17. அனிலமா மமுதினை யடைக வுயிரே
யதன் பின் பொடியா யழிகவிவ் வுடலே
வினையியல் செயலுடன் விளங்கும் தலைமை
யுள்ளுயி ரேயவ் வொருவனை யுன்னுக
செய்வினை தன்னையும் சிறிதே நினைக
பிரணவ நினைந்து கரும மு நினைகவே.

18. எரியெனுந் தேவனே யெமக்கருள் புரிக
கடும மு ஞானமுங் கருத்துற வறிந்தே
இனத்தவ ராக வெம்மை நீ கருதுக
செய்வினைப் பயனையாம் எய்துதற் பொருட்டே

யறநெறி நடத்துக பிறவினை யொழிக்க
யாநினை மனமுற விறைஞ்சுது பிறையே

Colophon :

ஓம் சாந்தி சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(கு-பு)

இந்நூல் ஈசோப நிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது.

R. No. 7772

கேநோப நிடதம் - மூலம்

KĒNOPANIḌATAM-Text

Pages : 7-11 Extent 80 granthas

Begins on page 7 of the manuscript described under R. No. 7771.

Complete

An elegant Tamil translation of the Sanskrit Upanishad namely Kenopamishad. This is one of the achievements of the author N. Kanagarajaier of Pudukkottai.

Beginning

முற்கூற்று

பிரமம் என்ற பெரும்பரம் பொருளே
அளிக்க நம்மை; வளர்க்க நம்மையை
யாமிரு வேமும் இயல்வலி மிகப்பெறீ இ
உழைப்பே மாகுக ஒளியொடு விளங்குக
நாம்பயில் பயிற்சி நல்வலி படைத்தே
பகையிலா நெறியில்யாம் பயில்வேமாக

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

முதற் கண்டம்

1. எதனால் மனமே யியக்கம் பெறுவது;
எதனால் உயிருணர் வியக்கம் பெறுவது?
எதனால் நாவிவை யியம்ப வியலும்?
எவ்வொளிப் பொருளால் இயலும் விழிசெவி?

2. செவியினுட் செவியாம்; மனத்தினுள் மனமாம்
வாயினுள் வாயாம்; உயிரினுள் உயிராம்
விழியினுள் விழியாம்; விபுதர் இதையறிந்
திவ்வுல ககன்றது மீறில்வாழ் வுறுவர்.

End

32. ஓதுக ஆரிய, உபநிடதப் பொருள்
ஓதினம் நினக்கே உபநிடதப் பொருள்
பிரம மிதுவெனத் தெரியுப நிடதம்
ஓதினம் நீயும் உணர்ந்தனை யென்றனன்

33. தவமும் அடக்கமும் தக்கநல் வேள்வியும்
அதன்கழ லாகும் அங்கமே மறைகளாம்
உண்மையே யதனுக் குறையுளா மென்ப.

34. இங்ஙனம் யாவன் இதனை யறிந்தவன்
அவனே தீதெலாம் அழித்து வென்றுபின்
உயர்பே ரின்பம் உறுபவன் ஆமே.

Colophon :

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(கு-பு)

இந்நூல் கேநோப நிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது.

R. No. 7773

கடோப நிடதம்

KAṬŌPA NIḌATAM

Pages : 13—27 Extent 30 granthas.

Begins on page 13 of the manuscript described under R. No. 7771.

Complete

A Tamil mode of presentation of the Sanskrit Upanishad, Katopanishad, in verses. N.Kanagarajaier, pointed earlier, is the author.

Beginning

முதல் அத்தியாயம்

முற்கூற்று

பிரமம் என்ற பெரும்பரம் பொருளே
அளிக்க நம்மை வளர்க்க நம்மையே
யாமிரு வேமும் இயல்வலி மிகப்பெறீஇ
யுழைப்பே மாகுக; வொளியொடு விளங்குக
நாம்பயில் பயிற்சி நல்வலி படைத்தே
பகையிலா நெறியில்யாம் பயில்வே மாக.

முதல் வல்லி

1. வானலன் வேட்டு வாசச் சிரவசர்
விசுவ சித்தெனும் வேள்வியில் தம்பொருள்
அனைத்தையும் வழங்கினர் அவர்க்கொரு மைந்தன்
நாசிகே தசெனும் நல்லோ னிருந்தனன்.

2. வழங்கும் பொருள்கள் வருவது கண்ட
நன்மகன் சிரத்தையால் நாடினன் உளத்தே

3. புனல்குடித் தொழிந்தன புன்மேய்ந் தொழிந்தன
கறவை யொழிந்தன கன்றினிப் பெறாதன
இத்தகைப் பசுக்களை யீவோன் செலுமுலகு
இன்ப மற்றதாய் இருத்தல் திண்ணமே

End

ஆறாம் வல்லி

17. பெருவிர லுருவுள புருடனா முள்ளுயிர்
உயிர்களி னிதயத் துள்ளுறை கின்றனன்
புல்லினின் றீர்க்கைப் புறத்தே யெடுத்தல்போல்
உடலினிற் பிரித்தே யுணர்க வவனை
அழிவிலன் றூயனென் றறிக வவனையே
அழிவிலன் றூயனென் றறிக வவனையே.

18. தென்றிசைக் கிறைவன் றெரித்தவிப் பொருளையும்
யோக நெறியையும் உணர்நசி கேதசு
மாசுக ளகன்று மரணமுங் கடந்து
பிரம பாவம் பெற்றன னென்ப;
இங்ஙன முள்ளுயிர் யாவ னுணர்வனோ
அவனுமப் பேரின்படைபவ னாமே.

Colophon

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(கு-பு)

இந்நூல் கடோப நிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது.

R. No. 7774

பிரசினோப நிடதம்
PIRASINŌPA NIḌATAM

Pages : 29-39 Extent 200 granthas.

Begins on page 29 of the manuscript described under R. No. 7771.

Complete

Sanskrit Prasnopamishad has been made here in Tamil verses by N.Kanagarajaier

Beginning

தேவர்காள் கேட்கயாம் செவிகளால் நலனே
தொழுதகு பெரியீர் விழிகளால் நலனே
காண்பே மாக வேண்டுது நுமையாம்
பாடுவே நும்புகழ் படைத்த நாளெல்லாம்
வலிமிகு முடலொடு முறுப்பொடும் வாழவே.

முதற் பிரசினம்

1. பாரத் துவாச சுகேசரும் சைப்பிய
சத்திய காமரும் சௌரியா யணியாம்
கார்க்கிய முனியும் கௌசலி யராம்
ஆச்வலா யனரும் பார்க்கவ ராகிய
வைதருப் பரும் காத்தியா யனராம்
கபந்தியும் என்னக் கழறிய வின்னவர்
பிரம பரராய்ப் பிரம நிட்டராய்ப்
பிரம நாடும் பேரறி வுடையராய்
அதனை யெல்லாம் அருளுவ ரெமக்கெனச்
சமிதை கரத்தே தாங்கின ராகிப்
பிப்ப லாதராம் பெரியரை யடைந்தனர்.

2. இருடி கூறினர் இன்னுமோ ராண்டு
தவநெறி பிரம சரியநீர் தாங்குமின்
அதன்பினர் விரும்பிய வாறு வினவலாம்
அறிவே னெனினுமக் கறைவன்யா னுறுதியே.

End

ஆறாம் பிரசினம்

7. அவர்களுக் கம்முனி யறைகுவர் பின்னரும்
பிரமமென்னும் பெரும் பொருள் தன்னை
இவ்வள வேயான் செவ்விதி னுணர்வன்
இதனிற் சிறந்த தில்லைவே றொன்றுமே.

8. முனிவரை வணங்கி மொழிந்தன ரறுவரும்
அவிச்சையின் மறுகரை யடைவித் தருளிய
தந்தையா மெமக்குநீர் தாளுற வணங்குதும்
பரம விருடியர் பதமலர் பணிதுமே
பரம விருடியர் பதமலர் பணிதுமே.

சாந்தி

புகழ்மிகு மிந்திரன் மிகுநல னருள்க
புரவல ராகிய பெரிய தேவர்கள்
நலனமக் கருள்க ஞாயிறு நாமன்
தடைபடா வுருளுடைத் தருபெருந் தேரோன்
நலனமக் கருள்க நாவின் தலைவனும்
நலனமக் கருளி நன்றுபு ரக்கவே.

Colophon :

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(கு-பு)

இந்நூல் பிரசினோப நிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது.

R. No. 7775

முண்டகோப நிடதம்
MUṆḌAGŌ PANIḌATAM

Pages : 41-51 Extent 220 granthas.

Begins on page 41 of the manuscript described under R. No. 7771.

Complete

Similar to the work described under R. 7770. Also a work of N. Kanagarajaier.

Beginning

முதல் முண்டகம்

முற்கூற்று

தேவர்காள் கேட்கயாம் செவிகளால் நலனே
தொழுதகு பெரியீர் விழிகளால் நலனே
காண்பே மாக வேண்டுது நுமையாம்
பாடுவே நும்புகழ் படைத்த நாளெல்லாம்
வலிமிகு முடலொடும் உறுப்பொடும் வாழவே

முதற் கண்டம்

1. உலகின் றலைவன் உயிர்களின் காவலன்
பிரமன் தேவருட் பிறந்தனன் முதற்கண்
எவ்வகை வித்தையும் இருப்பதாம் பிரம
வித்தையை யவனே மேதகு முதன்மகன்
அதருவன் பெறுகென வருளின னன்றே.

2. அதருவ னுக்கென வயனருள் பிரம
வித்தையை யவனும் விளம்பின னங்கிரற் (கு)
அவனும் சத்திய வகபரத் துவசற் (கு)
உரைத்தன னதனை யுயர்நெறி யுணர்ந்தவா(று)
ஆங்கீர சனுக் கவன்புகன் றனனே.

End

இரண்டாம் கண்டம்

. . . .

10. இருக்கினு மின்ன திசைக்கப் படுமே
நல்வினை புரிந்தோர் நான்மறை பயின்றோர்
அபரப் பிரமத் தமைகருத் துடையோர்
ஏக விருடியில் இயல்வினை யியற்றியோர்
சிரத்தையால் முறையுறச் சிரத்தின் விரதம்
பூண்டோர் இவர்க்கே புகலத் தகுமிப்
பிரம வித்தையாம் பெருமைப் பொருளே

11. அங்கிர முனிவர் அறைந்தனர் பண்டைநாள்
இன்ன மெய்ப்பொருள் இதனை யுணர்தற்
கியற்றிய நோன்பிலான் ஏற்புடை யானலன்
பரம விருடியர் பதமலர் வணங்குதும்
பரம விருடியர் பதமலர் வணங்குதும்

சாந்தி

தேவர்காள் கேட்கயாம் செவிகளால் நலனே
தொழுதகு பெரியீர் விழிகளால் நலனே
காண்பே மாக வேண்டுது நுமையாம்
பாடுவே நும்புகழ் படைத்தநா ளெலாம்
வலிமிகு முடலொடு முறுப்பொடும் வாழவே

Colophon :

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(கு-பு)

இந்நூல் முண்டகோப நிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது.

— —

R. No. 7776

மாண்டுக்கியோப நிடதம்
MĀṆḌUKKI YŌPA NIḌATAM

Pages : 53-55 Extent 50 granthas

Begins on page 53 of the manuscript described under R.No. 7771.

Complete

These are Tamil verses by N.Kanagarajaiyer giving the essence of Sanskrit Mandookyopanishad.

Beginning

முற்கூற்று

தேவர்காள் கேட்கயாம் செவிகளால் நலனே
தொழுதகு பெரியீர் விழிகளால் நலனே
காண்பே மாக வேண்டுது நுமையாம்
பாடுவே நும்புகழ் படைத்த நாளெலாம்
வலிமிகு முடலொடும் உறுப்பொடும் வாழவே

முதற் கண்டம்

1. இவையெலாம் ஓமெனு மெழுத்தே யாகும்
அதன்பொருள் விளக்கமே யனைத்து மாகும்
இறப்பு நிகழ்வு மெதிர்வு மோங் காரமே
கால மும்மையும் கடந்ததெப் பொருளோ
அதுவு மோமெனு மக்கர மாமே.

2. இவையெலாம் பிரமமே; யின்ன ஆன்மா
அதுவே யாகும்; ஆன்மா வென்ப (து)
ஒருநாற் பாதம் உள்ள தென்ப.

End

நான்காம் கண்டம்

12. மாத்திரை யில்லதாய் வாய்த்த நான்காம்
நிலையே வழக்கெலா நிலைபெறா நிலையாம்
அலகில் உலகுயிர் அடங்குறு நிலையாம்
இரண்டறு சிவமாய் இருப்பது மதுவே
ஆன்மா வாகும் அன்னவோங் காரமே
இங்ஙனம் இன்ன தெய்துவோன் எவனே
அவனே யான்மனா லான்மணை யறியுமே
அவனே யான்மனா லான்மனை யறியுமே.

சாந்தி

1. தேவர்காள் . . . . வாழவே

2. புகழ்மிகு . . . . புரக்கவே

Colophon :

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

(கு-பு)

இந்நூல் மாண்டூக்கியோப நிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது.

R. No. 7777

மாண்டூக்கிய காரிகை
MĀṆḌUKKIYA KĀRIKAI

Pages : 57 - 83 Extent 550 granthas

Begins on page 57 of the manuscript described under R. No. 7771.

Complete

A book of 100 verses on, mainly, human souls, by N. Kaudapadacharyar. Author, N. Kanagarajaiyer. Period, 20th century.

Beginning

பரமஹம்ஸ பரிவாரமு காசாரிய
ஸ்ரீ கௌடபாதாசார்யர் அருளிய
மாண்டூக்கிய காரிகை

ஆகமப் பிரகரணம்

1. விசுவ னென்போன் வெளிச்செலு மறிவினன்
எங்கும் நிறைந்த வியல்பின னவனே
தைஜஸ வொளியினன் தன்னகத் தறிவினன்
பிராஞ்ஞனா மறிவன் பேரறி வுருவினன்
ஒருவனே மும்மையா லுணரப் படுமே.
(தைஜஸன் - ஒளியினன்)

2. வலக்க ணிடத்து நிலைப்பவன் விசுவனே
மனத்தி னகத்தே வாழ்குவன் ஒளியினன்
பிராஞ்ஞ னென்னும் பெயருடை யறிவன்
இதயவிண் ணிலத்தே யிருப்புடை யவனாம்
இங்ஙனம் உடற்கண் இயலுமால் மும்மையே

End

சுலாத சாந்திப் பிரகரணம்

99. அறிவர்தம் அறிவு பிறவுள பொருள்கள் பால்
தொடர்புறப் பற்றுதல் சொல்வதற் கில்லை
ஆதனின் ஆன்மா அறிவின் உருவமே
புத்தரால் இன்னது புகலப் பெறவிலை.

100. அறிதற் கரிய அரும்பெருஞ் சிறப்பது
பிறப்பில தொருமை சிறப்புறு தூய்மை
பன்மை யற்றவப் பதத்தினை யுணர்ந்தே
வாய்த்த வளவு வணங்குதும் யாமே,

Colophon :

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(கு-பு)

இந்நூல் மாண்டுக்கிய காரிகை என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது.

R. No. 7778

ஐதரேயோப நிடதம்
ITARĒYŌPA NIḌATAM

Pages : 85-93   Extent 180 granthas

Begins on page. 85 of the manuscript described under R. No. 7771.

Complete

This Itareyopanishad is in Tamil form composed in verses by N. Kanagarajaiyer.

Beginning

முற்கூற்று

நெஞ்சினி லென்மொழி நிலைப்ப தாகுக
நெஞ்சமு மொழியினில் நிலைப்ப தாகுக
தானே தோன்றிய தலைமைசா லான்மனே
என்முன் தோன்றுக இயம்பிய மனமொழி
மறைப்பொருள் தன்னைப் பொறுப்பன வாகுக
கேட்டன மறைகளைக் கெடாது காக்க
பயின்றவிம் மறைகளால் முயன்றுயா னிணைப்பன்
இரவு பகலெனும் இரண்டுமொன் றுறவே
வாய்மை யுரைப்பன் வழங்குவன் மெய்ம்மை
புரக்க வெனையது; புகல்வோன் றனையது
காப்ப தாகுக; காக்க வெனையே
புகல்வோன் றனையும் புரப்ப தாகவே

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

முதல் அத்தியாயம்

முதற் கண்டம்

1. ஆதியி லின்ன தான்மா வொன்றே
யென்ன விருந்தது இருந்தில வெவ்வகை
யுயிர்களும்; யானிவ் வுலக மியற்றுவன்
என்ன ஆன்மா எண்ண மிடுமே.

2. அம்ப மரீசு மரமப் பாகிய
இவ்வுல கங்களை யியற்றின னவனே
உம்பருக் குப்பால் அம்ப முளதே
உம்ப ருலகமவ் வுலகினைத் தாங்குமே
மரீசி யென்பது விரிவிண் ணுலகமாம்
மரவுல கென்பது மண்ணுல காகும்
மண்ணுல கதன்கீழ் வருமப் புலகே.

End

மூன்றாம் அத்தியாயம்

ஐந்தாம் கண்டம்

4. அறிவி னுருவே யாகிய வ ன்மனால்
இவ்வுல கத்தினைச் செவ்விதிற் கடந்தே
உம்ப ருலகினில் உவப்பினுக் குரிய
யாவகை வேட்கையு மேவின னாகி
அமுத மெய்தினன் அமுத மெய்தின்னே

சாந்தி

நெஞ்சினி லென்மொழி நிலைப்ப தாகுக
நெஞ்சமே மொழியினில் நிலைப்ப தாகுக
தானே தோன்றிய தலைமைசால் ஆன்மனே
என்முன் தோன்றுக இயம்பிய மனமொழி
. . . .
காப்ப தாகுக; காக்க வெனையே
புகல்வோன் றனையும் புரப்ப தாகவே,

Colophon :

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(கு-பு)

இந்நூல் ஐதரேயோப நிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது.

R. No. 7779

தைத்ரியோப நிடதம்
TAITRIYOPA NIḌATAM

Pages : 95—114 Extent 400 granthas

Begins on page 95 of the manuscript described under R. No. 7771.

Complete

This Tamil work, done by N. Kanagarajaiyer in verses, is in 10 anuvagas. Subject is similar to that of sanskrit Taitriyopanishad.

Beginning

சீக்ஷா வல்லி
முதல் அநுவாகம்

1. ஓம் நலன் நமக்கே யுதவுக மித்திரன்
வருணன் அருள்க அரியமான் நமக்கு
நலஞ்செய்வோன் ஆகுக; நலமே யருள்க
இந்திரன் பிரகற் பதியெனு மிவரே
எங்கும் நிறைந்த விறைநலனை ருள்கவே.

2. பேசுதும் வணக்கம் பிரமம் தனக்கே
வாயு நினக்கே வணக்கம் புரிதும்
கண்கூ டாகக் காணும் பிரமம்

நீயே யாதி நின்னையே யானும்
காணும் பிரமமாக் கழறுவன் வாயுவே

வாய்மை யுரைப்பன் வழங்குவன் மெய்ம்மை
புரக்க வெனையது; புகல்வோன் றனையது
காப்ப தாகுக; காக்க வெனையே
புகல்வோன் றனையும் புரப்ப தாகவே.

இரண்டாம் அநுவாகம்

1. சீட்சையா மொலிநூல் தெளிவுற விளக்குதும்
வருணம் சுரமே மாத்திரை பலமே
சாமசந் தானமே சாற்றினம் சீட்சை

End

பிருகு வல்லி
பத்தாம் அநுவாகம்

உறையுள் நாடி யுறுபவர் தம்மை
அகற்றுத லாகா ததுநோன் பாகும்
ஆதலி னெவ்வழி யாயினு முயன்று
மிக்க வுணவினை வேண்டி யடைக
அவற்குண வுளதென் றறையப் படுமே;
. . .   .
. . .   .
அழிவறு நிலைமைக் காகரம் யானே
என்னை யீவோன் இங்ஙனம் காப்பன்
உணவியான் உண்பேன் உண்பான் றனையே
யாவும் யானே யாவையு மழிப்பன்
இதனை யறிவோன் எய்துவ னதனையே

சாந்தி

பிரமம் என்ற பெரும்பரம் பொருளே
அளிக்க நம்மை வளர்க்க நம்மையே

. . . .
. . . .
பகையிலா நெறியில்யாம் பயில்வே மாக

(கு-பு)

இந்நூல் தைத்ரியோப நிடதம் என்னு' பெயர்த்து. முற்றுப் பெற்றது.

R. No. 7780

சாந்தோக்கியோப நிடதம்
SĀMTŌKKI YŌPA NIḌATAM

Pages : 115- 239 Extent 2500 granthas

Begins on page 115 of the manuscript described under R. No. 7771.

Complete

This deals with dharma, souls, jeevanmuktar etc. in the same as Sanskrit Santokyopanishad. Author of this Tamil piece is N. Kānagarajaiyer of Pudukkottai. The work is in 8 chapters.

Beginning

இயல்வலி பெறுக வெனதுட லுறுப்பும்
நாவும் உயிரும் நல்விழி செவிகளும்
உடலி னாற்றலும் உளபிற பொறிகளும்
இவையெலாம் மறைமுடி யியம்பும் பிரமமே
என்று மதைமறா வியல்பையான் பெறுக
மற்றப் பிரமமு மறாதெனை யேற்க
மறுப்பெனுஞ் செயலே வழங்கா தொழிக

என்கண் மறுப்பே யில்லா தொழிக
மறைமுடி யமைந்த வறநெறி யாவும்
ஆன்ம விருப்புள வடியெனை யடைகவே.

முதல் பிரபாடகம்
முதற் கண்டம்

1. உத்கீத மாகிய ஓமெனு மெழுத்தை
யோர்ந்து தெளிக ஓமென வன்னது
ஒலிக்கப் பெறுமதன் உள்ளுறை விளக்குதும்

2. இவ்வுயிர்க் கெல்லாம் இரதம் நிலமே
நிலனுக் கிரதம் நீரே யாகும்
நீரினுக் கிரதம் வேர்பெறு பூண்டுகள்
பூண்டுகட் கிரதம் புருடனே யாகும்
புருடனுக் கிரதம் பொலிவுறு மொழியாம்
மொழியினுக் கிரதம் மொழிபெறு மிருக்கே
இருக்கினுக் கிரதம் இசைபயில் சாமமே
சாமத் திரதம் சாற்றுமுத் கீதமே

3. எட்டாம் இரதமா வியலுமுத் கீதமே
பரம பவித்திரம் பிரம நிலைக்களம்
இரத மெவற்றுளும் இரதமா மதுவே.

End

எட்டாம் பிரபாடகம்
பதினைந்தாம் கண்டம்

... ...
... ...
பிரம விச்சையாம் பெரும்பொரு ளிதனைப்
பிரம னருளினன் பிரசா பதிக்கே
மனுவுக் கவர்தாம் வழங்கினர் இதனையே
மக்களினம் பெற மனுவே யருளினர்
குருகுல மதனிற் சுருதியை யோதி
விதிமுறை செயத்தகு வினையெலா மியற்றுபு

விரத முடிவு மேவப் பெற்றே
இல்லற வாழ்க்கை யியைபுற மேற்கொளீஇ
யறநெறி கடைப்பிடித் தடையுமா ணவர்க்கு
நல்ல நிலத்தில் நான்மறை பயிற்றி
பொறிக ளனைத்தையும் நெறிமுறை யடக்கி
வேத மோதிய விதிகளா னன்றி
யுயிர்க ளினத்துக் கொருவகைத் தீங்கும்
இயற்றுதல் தவிர்ந்தே யிம்ப ருலகினில்
உயிருள நாளெலாம் செயிரற வாழ்வுறீஇப்
பிரம வுலகப் பெருவாழ் வெய்துவன்
மீளானவனே மீளா னவனே

சாந்தி

இயல்வலி . . . .
. . . .
. . . . அடைகவே.

(கு-பு)

இந்நூல், சாந்தோக்கியோப நிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இஃது எட்டு அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. கிரஹஸ்தனைக் குறித்து உபதேசிப்பதாகவுள்ளது. முதல் அத்தியாயம் உத்கீத, அக்ஷி, ஆகாச வித்தைகளையும், இரண்டாம் அத்தியாயம் தருமத்தின ஸ்கந்தங்கள் மூன்று என்பது முதலானவற்றையும், இதே போன்று பிற அத்தியாயங்கள் வேதங்களின கருத்துக்களையும் தெரிவிக்கின்றன. ஜீவன் முக்தன் இவ்வுலகில் வாழ்பவனாயினும் ஆன்ம உலகிலேயே வாழ்கிறான் என்பது இதன் முடிந்த முடிவாகும். அவன் வாழ்க்கை பிறரும் ஆன்ம உலகிற்கு ஏறுவதற்கு வைத்த நூலேணி போலிருக்கிறது. காண்க.

இதனை வடமொழியினின்றும் தமிழில் மொழி பெயர்த்தவர் நா. கனகராஜையர் என்பவராவார். ஊர் :- புதுக்கோட்டை. காலம் :- தற்காலம். காண்க.

R. No. 7781

பிரகதாரணிய கோப நிடதம்
PIRAKATĀRAṆIYA KŌPA NIḌATAM

Pages : 241-348 Extent 1800 granthas.

Begins on page 241 of the manuscript described under R. No. 7771.

Incomplete

Sanskrit Brhadaraniyakopanishad has been rendered in Tamil verses by N. Kanagarajaier, mentioned earlier. This Upanishad throws light on Yagas, mantras used therein, teaching of the knowlegde of Brahman by Kshatriya king to brahmins and other similar branches.

Beginning

முற்கூற்று

பூரண மதுவே பூரண மிதுவே
பூரணத் திருந்து பூரணம் பிறந்தது
பூரணத் தலகிலாப் பூரணம் தோன்றியும்
பூரணம் உள்ளது பூரண மாகவே.

முதல் அத்தியாயம்

முதல் பிரமாணம்

அசுவ மேதிய அசுவந் தனக்குக்
காலை வேளையே கருதுறு தலையாம்
கதிரவன் விழியாம் காற்றே யுயிராம்
வைசுவா நரக்கனல் வாயா குவதாம்
சம்வற் சரமே தகுந்த வுடலாம்
உம்ப ருலக முறும்ப ராங்கமே
இடையுல காவதி யையுறு வயிறாம்
நிலவுல கதன்கழல் நிறுவுறு நிலையே
திசைகள் நான்கும் இசையுறு பாரிசம்

இடைத்திசை விலாவுறு மென்புக ளாகும்
இருது வாறு மருவுறு மங்கமே
திங்களும் பக்கமும் பொங்கிய கணுக்களாம்
இரவும் பகலும் இருகழ லாகும்
தாரகைக் கணங்கள் ஏருறு மென்பாம்
விண்ணுறு முகிலே நண்ணிய வூனாம்
மணலே யறாது வயிற்றுலு மன்னமாம்
. . . .
. . . .
மழைசிறு நீராம் வாக்காம் வாயே. (க)

End

ஐந்தாம் அத்தியாயம்

பதின்மூன்றாம் பிரமரணம்

2. எசாமறை பிராணன் என்னப் படுமே
எசுவெனும் பிராணன் இருப்பதா னன்றே
பூத மனைத்தும் பொருந்தும் வாழ்வே
உயர்வினை யெய்த ஒன்றும் எசுமறை
இங்ஙன மிதனை யெய்தப் பெறுவோர்
எசு சாயுச்சியம் எசு சாலோக்கியம்
அடைவா னென்றே அறையப் படுவதே.

3. சாமம் பிராணனாச் சாற்றப் படுமே
சாமம் பிராணனாச் சரிப்பதா னன்றே
பூத மனைத்தும் பொருந்தும் தகுதியே
இதனுள் யாவும் எய்தும் சிறப்பே
இதனை இங்ஙனம் எய்தப் பெறுவான்
சாமசா யுச்சியம் சாமசா லோக்கியம்
அடையுந் தகுதிக் கமைந்தவ னாமே.

(கு-பு)

இந்நூல் பிரக தர்ரணிய கோப நிடதம் என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றதாகத் தெரியவில்லை. இந்நூல் முதல் அத்தியாயம் தொடங்கி ஐந்தாம் அத்தியாயத்தின் பெரும் பகுதியுடன் முடிவடைகிறது. முதல் அத்தியாயம் யக்ஞத்தில் நிகழும் சில உபாசனைக் கருத்துக்களையும், மந்திரங்களை உபயோகிக்கும் முறைகளையும் பற்றிக் கூறுகிறது. இரண்டாம் அத்தியாயத்தில் பிரம்ம ஞானம் க்ஷத்திரிய அரசனால் பிரகமணனுக்கு உபதேசிக்கப்படுகிறது. இதைப் போன்றே பிற அத்தியாயங்களும் உயர்ந்த பல தருமங்களை எடுத்துக் கூறுகின்றன. ஞானத்திற்குத் தவமே சிறந்த சாதனம் என்பதும், நோவும் சாவும் கூடத் தவம் எனவே கருதபட வேண்டும் என்பதும், பொதுவில் விளக்கப்படுகின்றன.

இவ்வரிய உபநிடதத்தை, வடமொழியினின்று, தமிழில் மொழி பெயர்த்தவர் நா. கனகராஜையர் என்பவராவார்.
ஊர்:- புதுக்கோட்டை; காலம்:- தற்காலம். காண்க.

R. No. 7782

ஆஞ்சநேய புராணம் - தொகுதி - ஒன்று
ĀṆCANĒYA PURĀṆAM - Volume - I

Paper : 34·3 × 21·5 c.m. Pages : 1-272

Lines 43 on a page. Tamil. Good. New. Extent 5000 granthas

Presented in 1962-63, by Thiru. N.Kanakaraja Aiyar, M.A.,M.E.S. (Rtd), No. 20, Venkatasvami Naidu, Agraharam, Madurai.

Complete

This is volume first of the Ancaneya Puranam, composed by N. Kanagarajaier, occured previously, in 2294 Viruttams. This puranam is based on Ramayanam, Bharatam, Bhagavatam, Brahmanda Puranam, Sethu Puranam etc. and is telling the story of Hanuman in for seven cantos. Presently this first volume contains the first three cantos.

Beginning

முகவுரை

அஞ்சிலே யொன்று பெற்றான் அஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக ஆரியற் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற அணங்கைக் கண்டயலா ரூரில்
அஞ்சிலே யொன்றை வைத்தால் அவ்வம்மை யளித்துக் காப்பான்
கம்ப நாடா

வால்மீகி முனிவரும் கம்ப நாடரும், துளசிதாசரும் பாரத தேசத்தின் மும்மணிகள் ஆவர். மகாகவிகள் ஆகிய இம்மூவரும் அருளிய இராமாயணத்தின் கதைப் போக்கிலே உள்ளம் உருக ஈடுபடும் மக்கள் இன்றும் பல கோடியர் ஆவர். எத்தனையோ நன்மக்களுக்கு, மனச் சாந்தியும், ஆத்மானுபவமும் தந்துதவும் இந்த இதிகாசரத்னத்தை ஒரு மகாமாலை என்று உரைப்பதும் அம்மாலையில் விளக்கம் மிக்க ஒரு மணி ஆஞ்சநேயன் என்று உரைப்பதும் இராமபக்த கோஷ்டியின் சித்தாந்தமாம்.

... ...
... ...

பிரமாண்ட புராணத்தில் தீர்த்த கண்டத்திலே பிருகு நாரத சம்வாத ரூபமான வேங்கடாசல மகாத்மியத்தில் வருஷமாசல உற்பத்திவர்ணனம் என்ற நான்காம் அத்தியாயமும், அஞ்சனாசல அபிதான வர்ணனம் என்ற ஐந்தாம் அத்தியாயமும் இவ்வரலாற்றை உரைக்கக் காண்கிறோம்.

ஸ்ரீ

ஆஞ்சநேய புராணம்

1. பால காண்டம்

பாயிரப் படலம்

தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்

பரம்பொருள்

1. வாக்கினால் மனத்தால் நான்கு மறைகளா லடைத லில்லான்
வாக்கினால் மனத்தால் அன்பர் வழுத்தவே வருமோர் வள்ளல்
தேக்கு பேரின்ப மென்ற திருவருள் பொழியும் தேவன்
மேக் குயர் கழல்கள் போற்றி விளம்புவா மனுமன் காதை (க)

நான்முகம்

2. வான்மிக முனிவன் செய்யுள் மாலையுண் மணியா மென்ற
பான்மைய வடிவை வாழ்வின் பண்பினை இராமபக்த
மான்மியம் என்னும் பேரால் மாருதி புகழைப் பேச
நான்முகத் திறைவன் பாத நளினத்தை யேத்தல் செய்வாம்.

அவையடக்கம்

15. முனிவரர் வணங்கி வாழ்த்தும் முதற்கவி திருவாக் கானும்
இனிமைசால் தமிழ வாக்கி யெனுங்கம்பர் வாக்கினாலும்
மனிதர்நன் குணர வாய்த்த மாருதி யனுமன் காதை
புனிதமா நெறியே தேறாப் புல்லியேன் புகல லாமோ?

2. திருவவதாரப்படலம்

22. சுத்த மாகிய சொற்பொருள் தேர்ந்துணர்
முத்தர் ஞானியர் மோன முனிவரர்
சித்தம் வாழ்ந்து சிறக்கும் இராகவ
பத்தன் மான்மியம் பாடத் தொடங்குவாம் (க)

23. அறத்தின் மாண்பை யழித்திவ் வவனியின்
மறத்தின் வாழ்வு மலியப் புரிந்திடும்
திறத்தின் விஞ்சிய தீமை யரக்கரைப்
புறத்தின் வெல்லப் புவியினர் நோற்றனர் (உ)

24. உருவம் உள்ள துருவ மிலாதது
அருவ மாவ ததுவு மிலாதது
சருவ மாகிய சத்த னென மறை
தருவ தொன்றினைச் சார்ந்து குறை சொல்வர் (ந)

7. மலை வாழ் படலம்

369. சூலியின ைதந்தெழுத்தைச் சொல்லியருந் தவமுயன்ற
வாலிதனை யெதிர்ப்பவர்தம் வலிமையினிற் செம்பாதி
கோலிவர வரம்பெற்றான் கொண்டவரம் பயன்பெறவே
கானியங்கும் திசைநான்கும் கடல்நான்கும் செல்வதுண்டே. (க)

End

8. இராவணத் துரும்புப்படலம்

2292. புலியினத் தரசு புலியினம் பிணவைப்
பொருந்துதல் பொருத்தமா மலது
மெலிவின துருவாய் விளங்கிய பூஜை
மெல்லி யல்லதனை விழைந் திடுமோ
வலியின துருவே யெமதுபே ரரசே வருகென
வழைத் திடு மகளிர்
கலியின திடையே யிராவணன் றனது
கருத்தினை மறந்தில னடைந்தான். (கருக)

2293. அகலுமுன் சனகி சிறைப்புறங் காவல்
அமைந்துள மகளிரை யழைத்தே
பகலுநள் ளிரவுமெனது சீர் விடுத்துப்
பன்னியே யிவள்மன மிணங்கிப்
புகலுறு நிலைமை பொருத்துதல் நுமது
பொறுப்பென வுணருதிர் கடமை
மிகலுற மறந்தே யிருந் தனிரெனின்யான்
வீட்டுவ துமையென வுரைத்தான். (கருஉ)

2294. கரும்பு போல் மொழிந்தோ வேம்புபோல்
மொழிந்தோ கடுவிடமென்னவே மொழிந்தோ
இரும்புபோல் வலிதா யிருக்குமின் னவள்தன்
இதயத்தை முறையினாற் கரைத்திர்
அரும்புபோல் முறுவல் முகத்தொடு மெனையே
அவாவினா லடைந்திட மனத்துள்
விரும்புமா புரிதிர் நுமக்கினி நகரில்
வேறிலை பணியென வகன்றாள். (கருங)

இராவணத் துரும்புப் படலம் 153 செய்யுள்

(கு-பு)

இந்நூல் ஆஞ்சநேய புராணம் - தொகுதி ஒன்று என்னும் பெயர்த்து முற்றுப் பெற்றது. இது அனுமனுடைய வரலாற்றை இதிகாச, புராணங்களின் துணை கொண்டு விளக்கிக் கூறுகின்றது. செய்யுள் வடிவினது. இந்நூல் இயற்றுவதற்குத் துணையாயிருந்த நூல்களுள் சில : 1. இராமாயணம் 2. பாரதம் 3. பாகவதம் 4. பிரமாண்ட புராணம் 5. சேது புராணம் முதலியன.

இதனுளடங்கிய காண்டங்களும் படலங்களும் வருமாறு :-

காண்டம்		படலம்
1. பால காண்டம்		7
2. அமாத்திய	,,	20
3. தூத	,,	24
4. சேவக	,,	29
5. பக்த	,,	14
6. கீதா	,,	18
7. அனுபூதி	,,	14
காண்டம் 7.	படலம்	126

இந்நூல் 7 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம்முதற்றொகுதியில் 1. பால காண்டம் 2. அமாத்திய காண்டம் 3. தூத காண்டம் (8-ம் படலம் முடிய) என்பவை அடங்கியுள்ளன.

ஆசிரியர் : நா. கனகராஜையர், ஊர் : புதுக்கோட்டை, காலம் : தற்காலம். காண்க.

R. No. 7783

ஆஞ்ச நேய புராணம் - தொகுதி இரண்டு
ĀNCA NĒYA PURĀṆAM–Volume II

Paper : 34·3 × 21·5 cm. Pages : 1 – 272

Lines 43 on a page. Tamil. Good. New. Extent 5000 granthas.

Complete

This is in continuation of the work noted above by the same author N. Kanagarajaier, Herein are present the end of the third canto and the first portion of the fourth.

Beginning

இரண்டாம் தொகுதி

தூத காண்டம்

1. கணையாழி பெற்ற படலம்

2295. அரக்கரிறை யகன்றளவி லவணாணை பெறு மகளிர்
இரக்க மணு வளவறியா விதயமுள ராதலினால்
பரக்கவிழித் துளமுருகும் பரவையினைத் தமதுவழி
துரக்கநினைந் தனல்மொழிகள் சொல்லுகின்றார் சிலசிலவே (க)

2296. களிறுநிகர் காதுடையாள் கண்ணிடுகு முகமுடையாள்
வெளிறிமுன மெழுந்துவளை விகார தந்த மிரண்முடையாள்
பிளிறுகின்ற களிறெனவே பேசுகின்றான் சினங் கதுவ
ஒளிறும் விழிகனல் பாய வுத்தமி நெஞ்சு லர்ந்திடவே. (உ)

2297. எம்பெருமா னிராவணனை யெளியனென நினைந்தனையோ
உம்பரபிரா னிந்திரனே யோராண்டு சிறைக் களத்தில்
வெம்புதுயர் இனையவிடும் வேந்தனென வறிகிலையோ
கம்பமதத் திசைக்களிறு கலங்க வரு தீரனையே. (௩)

24. திருவடி தொழுத படலம்

3367. உரவி லேந்திய தோளினன் அறத்தின் மெய் யுருவன்
பரவி நின்றவர் முகத்தினை நோக்கினன் பரிவால்
இரவி செல்வனே தென்றிசை நடந்தவர் இனுமேன்
வரவு காண்கிலேம் மதன னம்பு புகுந்ததன் மயக்கோ? (க)

End

4. சேவக காண்டம்

12. நாக பாசம் அழிந்த படலம்

4806. சிறையிலே யினையும் தேவியின்துயரம் தெரிதும்யா மாதலினிறையே
முறையிலே நிலையா வரக்கரை யழிக்கு முயற்சியிலியன்றது புரிவேம்
கறையிலே நிலைத்து விராவணன் மகனே கற்றுள படையெலாம் விடுக.
மறையிலே யொளித்த பொருள் துணையுடையேம் மாற்றவர் வலிகெட வெதிர்ப்பேம். (அஅ)

4807. நாகமா கயிற்றால் நமதுமாப் படையை நமனுல கனுப்பவே
நினைத்த
மேகநாதனுக்கே மனத்திலே தளர்ச்சி விளைத்திட வுதவினான்
கலுழன்
ஏகநா தனையும இனவிலா யெழுந்த இணையிலா
வில்வலான் றனையும்
மாகம்வாழ் பவரே மதித்திடத் தலைமை மருவியே
இளைப்பது முளதோ

4808. என்னவே புகழ்ந்து பணிந்தமா ருதியை
இராகவன் இயைபுறத் தழுவி
முன்னமே நிகழ்ந்த சமரிலு மினியாம்
முருகுவோர் தெரியதா தலினால்
நின்னதா முதவி பெரிதும் வேண்டுதும் யாம்
நிருதரை யழித்து வானரர்தம்
மன்னனாம் பரிதி மகள் மகிழ்வுறவே
வகைவகை வினைசெய்வோ மெனவே

நாக பாசம் அழிந்த படலம் 90 செய்யுள்

(கு-பு)

இந்நூல் ஆஞ்சநேய புராணம் - தொகுதி இரண்டு என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. முன்னூலின் தொடர்ச்சியே இது வாகும். இதன்கண் தூத காண்டம், கணையாழி பெற்ற படலம் முதல் சேவக காண்டம் நாக பாசம் அழிந்த படலம் ஈறாக மொத்தம் இருபத்தெட்டு படலங்கள் அடங்கியுள்ளன. ஆசிரியர் நா. கனகராஜ் ஐயர்; ஊர்.- புதுக்கோட்டை; காலம்:- தற்காலம்.

R. No. 7784

ஆஞ்ச நேய புராணம் - தொகுதி மூன்று
ĀṆCANĒYA PURĀṆAM - Volume III

Paper : 34·3 × 21·5 c.m. Pages : 1-272

Lines 43 on a Page. Tamil. good. New Extent 5000 granthas.

Complete

Same work as above. Author N. Kanagarajaier has alloted here, in volume III, 15 chapters of the fourth canto.

Beginning

4. சேவகக் காண்டம்

13. படைத்தலைவர் அழிந்த படலம்

4809. சீதையெம் பெருந்தெய்வம் சிறையிடை
வாதை யெய்திய வாழ்வை மறக்கவே
கோதை நீக்கிக் குணத்தைப் பெருக்குநின்
காதை யோதும் கவிகளின் பேறென்னே.

4810. இழிந்த வெம்மையும் ஏற்றனை நின்பணிக்
கழிந்த சிந்தைய ராவர் அரக்கரே
கழிந்த தன்னவர் கைவலி மெய்வலி
ஒழிந்த தென்பதை உம்பரும் ஒருவார்.

4811. நாக பாசத்தின் நல்வலி பாழ்பட
வேக வெஞ்சிறை வீரன் உதவியை
மாக தானவர் மண்ணவர் நோக்கவே
ஏக வில்லினை யேற்றனை யில்லையோ.

18. மூலபல வதைப் படலம்

5589. வன்மை தேய்ந்ததோ வரங்களால் யாம் பெறும் மதிப்பின்
நன்மை தேய்ந்ததோ போர்க்களம் புகுபவர் தமக்கு
வின்மை தேய்ந்ததோ மளித்ததோ ரிருவரால் விளைந்த
புன்மை வாய்ந்ததோ வெனக்கென யிராவணன் பொருமும்

End

27. திருமுடி சூட்டுப் படலம்

7268. வணங்கு சென்னியன் வாழ்த்திய வாயினன் மலரின்
அணங்கு சானகி நல்கிய மாலையை அனுமான்
இணங்கு வானார் அனைவரு முளமகிழ்ந் தெழவே
பிணங்கு நெஞ்சொடு பொருந்துற வணிந்தனன் பிடித்தே

7269. மற்று முள்ளவ ரனைவர்க்கும் வரன்முறை வழங்கி
முற்று மெய்யறி வெய்திய முனிவரர் மொழியும்
பற்று நீங்கிய வாயுறை வாழ்த்தினைப் பரித்தே
சுற்றும் வாழ்பவர் மகிழ்வுற விருந்தனன் சுடரோன்

7270. அரக்கர் வேந்தையும் அரிகளின் வேந்தையும் அவனி
புரக்க வாய்ந்துள மன்னவர் பிறரையும் புகழாற்
பரக்க மாநிலம் நிரம்பிய பிறரையும் பரிவான்
வரக்கண் மூர்த்தியு நோக்கினன் நலமெலாம் மலிய

திருமுடி சூட்டுப் படலம் 216 செய்யுள்

(கு-பு)

இந்நூல் ஆஞ்சநேய புராணம் - தொகுதி மூன்று என்னும் பெயர்த்து முற்றுப் பெற்றது. இது முன்னூலின் தொடர்ச்சியே ஆகும். இதன்கண் சேவக காண்டம், படைத் தலைவர் அழிந்த படலம் முதல் திருமுடி சூட்டுப் படலம் ஈறாக மொத்தம் 15 படலங்கள் அடங்கியுள்ளன. ஆசிரியர். நா. கனகராஜையர்; ஊர்:- புதுக்கோட்டை; காலம்:- தற்காலம். காண்க.

R. No. 7785

ஆஞ்சநேய புராணம் - தொகுதி நான்கு

ĀṆCANĒYA PURĀṆAM - Volume IV

Paper : 34·3 × 215 cm. Pages : 1—272

Lines 43 on a page. Tamil. Good. New. Extent 5000 granthas.

Complete

This Volume IVth of the Anjaneya Puranam by N. Kanagarajaier, continues the story of Hanuman, in 16 chapters from the canto fourth and fifth.

Beginning

28. அகத்தியப் படலம்

7271. முடிகெழு மரசுக் கெல்லாம் முடியர சமைதி காட்டிக்
குடிகளா முடலினுள்ளே குடிகொளு முயிரே போலப்
படியினை யாள வந்த பவித்திர மூர்த்தி முன்னர்
நெடியமா தவத்தராய நிலையினர் நெடுநாள் நின்றார்

7272. விருப்பினை வெறுப்பை யெல்லாம் வேரொடு களைந்தோ
ரேனும்
கருப்பையை நுழையா வண்ணம் கடுந்தவ முயன்றா ரேனும்
தருப்பொலி மகவான் வாழ்வும் தகுமென மதியா ரேனும்
உருப்பொலி யிராமன் முன்னர் உவப்பினால் நெடுநாள்
நின்றார்

7273. திருமுடி விழவைக் காணும் சிந்தையா லடைந்த மாந்தர்
பெருமுடி தந்தம் சென்னி பிறங்கிய மகிழ்ச்சி பூண்டார்
ஒருமுடி யொருவன் சூட புலகெலா முவந்த வின்பம்
திருவடி யடைவார் காணும் சிறப்பென விளங்கிற் றன்றே.

29. கிட்கிந்தைப் படலம்

7921. இறையவன் குபேரனுக் கீந்த புட்பகம்
நிறைவுற வெழுந்தனர் நேய நெஞ்சினோர்
மறைமுதல் பதமலர் மனத்தி லேற்றியே
உறைதரு நாடுகள் உறுதல் மேயினார்

End

14. பாரதப் போர் தொடங்கு படலம்

9873. நமதுசிறு சமர்க்குதவி புரிவலென
வுரிமையினால் நவின்ற வண்ணம்
இமயமலைக் கப்புறத்தா மலை கடந்து சமர்க்க
ளத்தே எய்தா நிற்கும்
சிமயமலை பொராதானைச் சிற்றுருவம்
பொறுத்தானைச் சிவனே யாகும்
சமயமுடி யுறுவானைத் துணைபடைத்தாய்
வெற்றியினிச் சாதந் தானே

9874 எனவுரைத்துத் தோள் தழுவும் வீமனை நன் கிரு தாளும் இறைஞ்சிப் போற்றி
கனவுரைத்த வருட்காட்சி நமக்குதவ வெழுந்தருளும் கண்ணன் உள்ளார்
மனமுரைத்த நன்னெறியே போர் புரிந்து பகைவர்களை வதைத்து வாழ்வோம்
நனவுரைத்த பயன்வேறு வேண்டுவதோ வெனவணங்கி நவின்றா னன்றே

9875 தருமனையும் தாயினையும் தகவணங்கிக் கண்ணபிரான் சரணம் பெற்றிக்
கரும மினித் தொடங்குதும் யா மிரத மெழு முகுத்தமிது கவியின் செம்மல்
அருமை பொலி துணையாக அமைந்துள்ளான் பகைத் திறத்தை யடைந்தார் யாரும்
இருமை யிழந் தழிவதற்கே புறப்படுவாமென விசயனிசைத் தானன்றே

பாரதப்போர் தொடங்கு படலம் 63 செய்யுள்

(கு-பு)

இந்நூல் ஆஞ்சநேய புராணம் தொகுதி நான்கு என்னும் பெயர்ந்து. முற்றுப் பெற்றது. இதுவும் முன்னூலின் தொடர்ச்சியே ஆகும். இதன்கண் சேவககாண்டம், அகத்தியப்படலம் முதல் பக்த காண்ட பாரதப்போர் தொடங்குபடலம் வரை மொத்த பதினாறு படலங்கள் உள்ளன. ஆசிரியர் நா. கனகராஜையர்; ஊர் : புதுக் கோட்டை; காலம் : தற்காலம்.

R. No. 7786

ஆஞ்ச நேய புராணம் - தொகுதி

ANCANĒYA PURAṆAM - Volume 5

Paper : 34·3 × 21·5 cm. Pages : 1—477

Lines 4000 on a page. Tamil. Good,. New. Extent 80 granthas.

Complete

With these sixth and seventh cantos, the story of Hanuman comes to a close which is composed in five volumes by N. Kanagarajaier

At the end of this volume are available Va. Su. Sengalvaraya-pillai's six stanzas on this puranam and also one piece entitled as Tiruvengada mudaiyan Tuthimanjari.

Beginning

6. கீதா காண்டம்

1. விசயன் மனம் தளர் படலம்

9876 சீதை காதலன் சீதரன் கேசவன்
காதை தன்னுட் கவினுறு மாமணி
ஓதை மீற வுலகம் புகழ்ந்திடும்.

9877 பண்டை மெய்ம்மறை பாரித் துரைத்தருள்
பண்டை மெய்ப்பொருள் பாண்டவன் கேட்கவே
பண்டை வண்ணம் பரிவொடு தாங்கியே
பண்டை மூர்த்தி பகர்ந்தனன் சீதையே

9878 ஒருவன் மெய்ம்மை யொருபொரு ளோதலே
ஒருவன் கேட்க வுலகம் பெறவருஉம்
பெருமை தாங்கு பெரும்பொருட் சீதையை
இருவர் கேட்டனர் என்பதே யுண்மையாம்.
. . . .

7. அனுபூதி காண்டம்

1. தீர்த்த யாத்திரைப் படலம்

11174 உள்ளற் குரிதாயுருகற் குரிதாகி
வெள்ளக் கருணை விளக்குமொரு பொருளை
அள்ளத் துணிந்த வனுமா னனுபூதி
விள்ளத் துணிவேம் விமலன்அருள் பிடித்தே
. . . .
. . . .

End

14. கிம்புருட கண்டப் படலம்

. . . .

13222 பெருமையே யுருவமான பெருந்தகை உருவைநோக்கி
அருமையே அருமையே யிஃதவனி மாதடைந்த செல்வம்
இருமையே மறந்த மேன்மை இணையிலா நிலைமையான
ஒருமையே உளத்திலோங்கும் உருவ மீதென்றாரன்றே.

13223. இவ்வண்ணம் இனிது வாழ இதயத்தே நினைந்த தூயோன்
செவ்வண்ணம் கருமை வண்ணம் சிறப்புறு வெண்மை வண்ணம்
திவ்விய முறவே பூண்ட திருவுரு நினைந்த வண்ணம்
கவ்விய யாழினோடு காட்சியைத் தருகின்றானே.

வாழ்த்து

. . . .

வாழிய அறிவர் கோட்டி வாழிய அன்பர் கூட்டம்
வாழிய புராணம் எல்லாம் வகுத்தருள் முனிவர் நாமம்
வாழிய இசையின் செல்வம் வாழிய முகுந்த நாமம்
வாழிய இராம நாமம் வாழிய அனுமன் சீரே.

Colophon :

பூர்த்தி : விஜய ஸ்ரீ புரட்டாசி மீ கக உ செவ்வாய்க்கிழமை காலை 5 மணி மஹாளய பக்ஷம் சப்தமி மிருக சீர்ஷம். மஹாவியதி பாதம் கும்பகோணத்திற் பிரதி நடந்தது.

சென்னை அடையாற்றில் கலாக்ஷேத்திரத்தின் அருகே உள்ள பெஸண்ட் உயர்தர கலா சாலையில் பர்ண சாலையிலே இரண்டாம் பிரதி முழுவதும் எழுதிப் பூர்த்தியாகி மாலையில் மாம்பலத்தில் வேங்கடராமையர் தெருவில் உள்ள ஹநுமானுக்கு வடைமாலை சாத்திப் பிரசாதம் பெற்றுக் கொண்டது. 11-2-54 வியாழக்கிழமை.

(கு-பு)

இந்நூல் ஆஞ்சநேய புராணம்-தொகுதி ஐந்து என்னும் பெயர்த்து. முற்றுப் பெற்றது. இதுவும் முன்னூலின் தொடர்ச்சியே ஆகும். இதன்கண் கீதா காண்டம், அனுபூதி காண்டம் என்னும் இரு காண்டங்களும் அடங்கியுள்ளன. ஆசிரியர்:- நா. கனகராஜையர்; ஊர் :- புதுக்கோட்டை; காலம் :- தற்காலம். இயற்றிய வேறு நூல்கள் :- இராமாயணத் திரிவேணி முதலியன. இந்நூலின் முடிவில் இந்நூலுக்குச் சாத்துக் கவிகளாக, திரு.வ.சு. செங்கல்வராய பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட ஆறு செய்யுட்கள் அடங்கியுள்ளன.

இந்நூலின் இறுதியில், 455-ஆம் பக்கம் முதல் 477-ஆம் பக்கம் வரை R. No. 7803 திருவேங்கட முடையான் துதி மஞ்சரி (தொடர்ச்சி) என்னும் நூல் அமைந்துள்ளது. காண்க.
